Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 64 | சனிக்கிழமை | தை 17 ஆம் நாள் 30 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# ஐ.நாவில் நெருக்கடியை ஏற்படுத்தவே போராட்டம்

## பதறுகின்றது கோத்தாபய அரசு



கொழும்பு, ஜனவரி 30

ஜெனீவாவில் எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு நெருக்குவாரங்களை ஏற்படுத்தும் நோக்குடனே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் செயற்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்கமையவே எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்துவதற்கு அந்த அமைப்புக்கள் உத்தேசித்துள்ளன என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

19 >

## ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பு!

### அரசுக்குப் பக்கப்பாட்டு பாடுகிறார் மஹாநாம

கொழும்பு. ஜன.30

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இலங்கையின் சுயாதீனத்துக்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. பக்கச்சார்பாக அமைந்துள்ள இந்த அறிக்கைக்கு இலங்கை அரசு உரிய பதில் வழங்க வேண்டும். இவ்வாறு இலங்கை மனித உரிமை

19 >

## மின் இணைப்பில் சிக்கி இருவர் உயிரிழப்பு!

மன்னார், ஜன.30

மன்னாரில் சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். மன்னார் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் திருக்கேதீஸ்வரம் மாளிகைத்தி

19 >

## மோட்டார் சைக்கிளால் பாய்ந்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம், உரும்பிராய் சந்தியில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து முற்பகல் 11.30 மணியளவில் நடந்துள்ளது. நல்லூரைச் சேர்ந்த சி.மயூரன் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் ஆசிரியர்

19 >

## தமிழர்கள் பயிற்சியளித்தால் இராணுவ பயிற்சிக்கு சம்மதம்!

### விக்னேஸ்வரன் 'தடாலடி'



யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கின்றேன் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளு

19 >

## வடக்கு மாகாணத்துக்கு 11 ஆயிரம் தடுப்பூசிகள்

### ஏற்றும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.30

வடக்கு மாகாணத்தின் மருத்துவ சேவையாளர்கள் உட்பட சுகாதாரத் துறையினருக்கு ஏற்றுவதற்காக 11 ஆயிரத்து 80 கொரோனா தடுப்பூசிகள் கிடைத்திருக்கின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

19 >

## வடக்கில் 7 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன.30

வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்குக் கொரோனாத்

14 >

## 5 ஆயிரம் பேருக்கு நேற்றுத் தடுப்பூசி!

கொழும்பு, ஜன.30

நேற்று மட்டும் நாட்டில் 5 ஆயிரத்து 286 பேருக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

கொரோனாத் தொற்றுத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நாட்டில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் மருத்துவ அதிகாரியாகக்

19 >

## தடுப்பூசி ஏற்றுவதில் அச்சப்படவேண்டாம்

### மருத்துவர் ஆனந்த கருத்து

கொழும்பு, ஜன.30

தடுப்பூசிகள் தொடர்பாக எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்று தேசிய தொற்று நோய்க்கான நிறுவனத்தின் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம

19 >

## 2013இல் கட்டிய விகாரை தொல்பொருள் சின்னமா?

### வலி.வடக்கில் காணி பிடிக்கும் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், ஜன.30

வலி.வடக்கில் இராணுவத்தினரால் 2013ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விகாரை அமைந்துள்ள பகுதியை தொல்பொருள் இடமாக அடையாளப்படுத்த தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை விடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

14 >

## குருந்தூர்மலையில் தமிழர் வழிபாட்டிடம் அழிப்புக்கு ஆதாரம்!

### பொலிஸார் நேரில் சென்று பார்த்துச் சென்றனர்

முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயம் உண்மையானது என்ற

14 >

## வவுனியா ரி.ஐ.டியில் 17 பேருக்கு தொற்று!

வவுனியா, ஜன.30

வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் 17 பேருக்கு நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

14 >

## தவறான முடிவெடுத்து மாணவன் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன.30

கிளிநொச்சி, மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த மாண

19 >

வலி. வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்

# தையிட்டி திஸ்ஸ விகாரையால் கூட்டத்தில் நேற்று அமளிதுமளி!

**யாழ்ப்பாணம், ஜன. 30**

**தையிட்டி திஸ்ஸ விகாரையின் கட்டுமானங்கள் உடன் அகற்றப்பட வேண்டும். தனியார் காணியொன்றில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கட்டுமானத்தால் எதிர்காலத்தில் நில ஆக்கிரமிப்புக்களும் இடம்பெறச் சாத்தியமுண்டு இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன்.**

வலிகாமம் வடக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்ட மேற்படி கூட்டத்தில், வலி. வடக்கில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.



இதன்போது, தையிட்டியில் தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அகற்றப்பட வேண்டும் என்றும் விகாரைகள் எதையும் புதிதாக அமைக்கக்கூடாது என்றும் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

எனினும் விடயத்தைக் கேட்டறிந்த ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் விகாரைகள் அகற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனால், அதைத் தீர்மானமாக நிறைவேற்றுவதற்குப் பின்னடித்தார்.

இதையடுத்து, 'சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இடத்துக்குள் இத்தகைய விகாரைகள் அமைக்கப்படக்கூடாது என்பதை ஏன் தீர்மானமாக நிறைவேற்ற அச்சப்படுகின்றீர்கள். எமக்குத் தேவை இறுக்கமான தீர்மானங்கள்தான்' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

இதற்குப் பதில் வழங்கிய அங்கஜன், இந்தச் சபையில் அரசியல் செய்யாதீர்கள். உங்களைப் போன்ற எண்ணம் தான் என்னிடமும் உண்டு. ஆனால், எம்மை நாமே இனவாதிகளாகக் காண்பிக்கக்கூடாது. குறித்த விடயம் உரிய வரைவில் உள்வாங்கப்பட்டு அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லப்படும், என்றார்.

(ம-319,26)

## 'விகாரை' என்னும் சொல்லை பயன்படுத்த மறுத்த அங்கஜன்!

யாழ்ப்பாணம், ஜன.30

வலி.வடக்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் விகாரை என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் பின்னடித்தார்.

வலி.வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இராணுவத்தால் விடுவிக்கப்படாத பிரதேசங்கள் தொடர்பாக அதில் பேசப்பட்டது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், விடுவிக்கப்படாதுள்ள இடங்களில் உள்ள விகாரைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும். அந்தப் பிரதேசங்களில் விகாரைகள் அமைக்கப்படக்கூடாது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த இணைத்தலைவர், விகாரைகள் என்ற சொற்பதத்தைத் தவிர்த்து சகல கட்டுமானங்கள் என்ற சொல்லைப் பாவியுங்கள் என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், விகாரை என்ற சொற்பதத்தை பாவிப்பதால் உங்களுக்கு என்ன பிரச்சினை? என்று கேள்வி எழுப்பினார். அதற்குச் சரியான பதில் எதையும் இணைத்தலைவர் இ.அங்கஜன் வழங்கவில்லை.

இராணுவத்தினரால் உருவாக்கப்படும் கட்டடத்தை நாம் இடித்தழித்தால் சிங்கள மக்கள் எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள். ஆனால் விகாரை என்ற பெயருடன் உருவாகும் கட்டடத்தை இடித்தழித்தால் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் கிளர்ச்சி உருவாகும். அதனால் விகாரைகள் அமைக்கப்படும் முன்னரே அவற்றைத் தடுத்து நிறுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் வலியுறுத்தினார். இதற்கும் இணைத்தலைவர் எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் வழங்கவில்லை.

(எ-319)

## கால்நடைப் பிரச்சினைகள் இல்லையாம்

யாழ். ஜன. 30

வலி. வடக்கின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் எவ்வித முறைப்பாடுகளையும் நேற்றுப் பதிவு செய்யவில்லை.

மீனவர்களும் விவசாயிகளும் தமக்கிருக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அவற்றுக்குத்தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தியிருந்த போதிலும் கால்நடை வளர்ப்பாளர்கள் சார்பில் எந்த முறைப்பாடும் கோரிக்கையும் பதிவுசெய்யப்படவில்லை. (ம319)

# பிரதேச செயலகத்தை உள்ளடக்கியே வலி.வடக்கில் காணி விடுவிப்பு!

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 30

வலிகாமம் வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி விடுவிப்பு நடவடிக்கைகளில், வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தின் தலைமையீடு முழுமையாக இருக்க வேண்டும் என்று சபையில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முதலாவது விடயமாக காணி விடுவிப்பு குறித்துக் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே மேற்படி தீர்மானிக்கப்பட்டது.

காணி விடுவிப்பு கலந்துரையாடல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்.எம்.ஏ.சுமந்திரன் காணி விடுவிப்புக் குறித்து இரு விடயங்களின் கீழ் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏற்கனவே அளவீடுகள் நிறைவடைந்து ஒரு பகுதியும், அளவீடுகள் மேற்கொள்ளப்படாமல் சில பகுதிகளும் இன்னும் விடுவிக்கப்படாத இடங்களாக உள்ளன. எனவே அவற்றை விடுவிக்கும் போது, பிரதேச செயலகத்தின் முழுமையான தலையீட்டின் கீழேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார். இதைச் சபையினரும் ஏற்றுக் கொண்டனர்.

இதன்படி 18 கிராம அலுவலர் பிரிவுகள் பகுதியளவிலும், 3 கிராம அலுவலர் பிரிவுகள் முழுமையாகவும் விடுவிக்கப்படவில்லை. இதன்படி ஜெ/248, 255, 256 கிராம அலுவலர் பிரிவுகள் பகுதியளவிலும், ஜெ/226, 233, 234, 235, 238, 240, 241, 242, 243 கிராம அலுவலர் பிரிவுகள் பகுதியளவிலும் விடுவிக்கப்படாமல் உள்ளன என்றும்

## இராணுவ நிர்வாகத்திடமிருந்து 'தல்செவனவை' விடுவிக்குக

### கஜேந்திரன் எம்.பி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30

காங்கேசன்துறை தல்செவன நிர்வாகம் மற்றும் ஜனாதிபதி மாளிகை நிர்வாகம் என்பன இராணுவத்தினரிடம் இருந்து பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன்.

வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் வலியுறுத்தியதாவது:

காங்கேசன்துறை தல்செவன மற்றும் ஜனாதிபதி மாளிகை என்பன ஏன் இன்னமும் இராணுவத்தினரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. அது மாற்றப்பட்டு மாகாண சபையின் ஆளுகைக்குக் கீழ் ஒப்படைக்கப்பட வேண்டும். அல்லது வலி. வடக்குப் பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குக் கீழ் பாரப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

(ம319)

# நகுலேஸ்வரரின் பிரச்சினைகளுக்கு விரைவில் தனியானதொரு கூட்டம்!!

யாழ்ப்பாணம், ஜன. 30

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு விரைவில் தனியானதொரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு வந்திருந்த ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நகுலேஸ்வரத்துக்குச் சொந்தமான கட்டமானங்கள் கடலரிப்பால் சேதமடைகின்றமை தொடர்பில் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்ததை அடுத்தே மேற்படி சிறப்புக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அதனதும் கீரிமலைக் கேணி வளாகத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்தும் யாத்திரிகர்களை கவரக்கூடிய விதத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துத் தரவேண்டும் என்று பிரதம குருக்கள் கோரிக்கை விடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர் ஆலய நிர்வாகத்தினரையும் இணைத்துக்கொண்டு சிறப்புக் கலந்துரையாடலை மேற்கொள்ள ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டார்.


(ம319)

# மயிலிட்டி துறைமுகத்தின் நிர்வாகம் தமிழர்களுக்கு!

## கஜேந்திரன் எம்.பி அழுத்தம்

**யாழ்ப்பாணம், ஜன. 30**

**மயிலிட்டி துறைமுகத்தின் நிர்வாகம் முழுவதும் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும், இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன்.**



*தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடிக்காகச் செய்யப்பட்டுள்ள வசதி வாய்ப்புக்கள்*

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே செல்வராஜா கஜேந்திரன் எம்.பி இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மயிலிட்டி துறைமுகம் சீர் செய்யப்பட்டபோதிலும் அதன் பயனை அனுபவிக்காதவர்களாகத்தான் எமது தமிழ் மக்கள் உள்ளனர். துறைமுகத்தின் பயன்கள் அனைத்தையும் தென்னிலங்கை மீனவர்களே அனுபவிக்கின்றனர். தென்னிலங்கை மீனவர்களின் பெரிய படகுகளை நிறுத்துவதற்குரிய இடம்தான் உரிய முறையில் செம்மைப்படுத்தப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மீனவர்களின் படகுகளோ கல்லிலும், பாறைகளிலும் அடிபட்டுச் சேதமாகின்றன. அத்துடன் படகுகளுக்கான எரிபொருள்களைக் கொண்டு செல்வதற்கும், வலைகளை படகுகளில் ஏற்றச் செல்வதற்கும் உரிய நடைபாதை இல்லாமல் எமது மீனவர்கள் அவதிப்படுகின்றனர். உண்மையில் தென்னிலங்கை மீனவர்கள் 100 வீதம் இங்கே ஆதிக்கம் செலுத்துகின்றனர். எனவே தென்னிலங்கை மீனவர்கள் ஆதிக்கம் செலுத்தாத வண்ணம் மயிலிட்டி துறைமுகத்தின் நிர்வாகம் எமது மீனவர்களுக்கே வழங்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

ஆனால், அவ்வாறு தீர்மானத்தை எடுக்க முடியாது என்றும் அதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என்றும், உரிய வரைவில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டு அறிக்கை நகர்த்தப்படும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், துறைமுகம் புனரமைக்கப்பட முன்பிருந்த நிர்வாக நடைமுறை (போருக்கு முன்னைய காலத்தில்) மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றார். பின்னர் ஒருவாறாக சபை அமைதியானது. (ம319)

## வீடுகள் வழங்கப்பட்டபோதிலும் 710 குடும்பங்கள் மீளமரவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 30

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட 710 குடும்பங்கள் மீண்டும் குடியமரவில்லை என்று சபையின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டது. 2009ஆம் ஆண்டு முதல் இற்றை வரையில் வலி.வடக்கில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட 710 குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குடியமரவில்லை. ஆனால் 2 ஆயிரத்து 300 குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே வலி. வடக்கில் இருந்து சென்று இடம்பெயர்ந்த குடும்பங்களாக இன்னும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், போர் காரணமாக இடப்பெயர்வைச் சந்தித்த எம் மக்கள் தற்போது பல்வேறு இடங்களில் குடியமர்ந்து நல் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எனினும் மீண்டும் தமது சொந்த மண்ணில் குடியமரவே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இங்கு அதற்குரிய வளங்கள், வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அவர்கள் மீண்டும் இங்கு வந்து குடியேறத் தயாராகவே உள்ளனர் என்றார்.

அத்துடன், வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படும் போது தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் வழங்காமல் பக்கச்சார்பாகவும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் அவற்றை வழங்கியமையின் விளைவே இவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் மக்கள் குடியேறாத நிலை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம319)

## சிறிய படகுகளுக்கு 5 வான்கள் தேவை!

யாழ்ப்பாணம், ஜன. 30

மயிலிட்டித் துறைமுகத்தில் ஐந்து வான்கள் (படகுகள் கரையிலிருந்து கடலுக்குச் செல்வதற்காக அமைக்கப்படும் ஓடுபாதை) அமைக்கப்பட வேண்டும் என்று மயிலிட்டி மீனவ சமூகம் வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்ற மாயை வெளியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் எமது மீனவ சமூகம் அங்கு எவ்வித வசதி வாய்ப்பும் இல்லாமலேயே அன்றாடம் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றது. போர்க் காலத்தின் முன்னர் மயிலிட்டியில் லொறிகளில் வருகைதந்து மீன்களைக் கொள்வனவு செய்து சென்றனர். ஆனால் இன்று அந்தப் பாதை சிதைவடைந்து சிதிலமடைந்து உள்ளது. அண்மையில் வீசிய இரு புயல்களால் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது. படகுகளுக்கான வான்களை அமைக்குமாறு நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுக்கின்றோம். கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி தரவில்லை என்பது தான் எமக்குரிய பதிலாக உள்ளது. எனவே வெளியில் இருக்கும் எண்ணப்பாடுகளை விடுத்து உள்ளூர் மீனவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் மயிலிட்டி துறைமுகத்தில் ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும் என்றனர். (ம319)



*மயிலிட்டி மீனவர்கள் பயன்படுத்தும் சீரற்ற நடைபாதை*

*மயிலிட்டி துறைமுகத்தில் தங்கியுள்ள*

## தென்னிலங்கை மீனவர்களால் யாழில் கலாசாரச் சீர்கேடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 30

மயிலிட்டி துறைமுகத்தில் தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களால் கலாசாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன - என்று மயிலிட்டி மீனவ சமூகத்தால் வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மயிலிட்டி துறைமுகத்தில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் விபச்சார விடுதிகளை நாடிச் செல்பவர்களாக இருக்கின்றனர். அத்துடன் அவர்களால் போதைப் பழக்கங்களும் எமது சமூகத்துக்குள் ஊடுருவுகின்றன. இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை - என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம319)

## கொரோனாப் பெருந்தொற்று! ஒலிவாங்கிகளுக்கு விலக்கு

யாழ்ப்பாணம், ஜன. 30

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒரே ஒலிவாங்கிகளை பலரும் மாறிமாறிப் பாவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

கொரோனாப் பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் சமூக இடைவெளிகளைப் பின்பற்றி இந்தக் கூட்டம் இடம்பெற்ற போதிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் கூடியிருந்த இடத்தில் ஒரே ஒலிவாங்கிகளை மாறிமாறி பலருக்கும் வழங்கியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறைந்த பட்சம் கிருமி நீக்கம் செய்யப்பட்டேனும் அவை மாறிமாறி வழங்கப்படவில்லை. (ம319)

## முழுமையாக விடுவிக்கப்படாத நிலையில் 18,713 வாக்காளர்கள் குறைப்பு எதற்காக?

### வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுவில் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 30

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள காணிகள் முழுமையாக விடுவிக்கப்படாத நிலையில் குறித்த பகுதியில் இருந்து 18 ஆயிரத்து 713 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளமை நியாயமற்றது

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுவின் நேற்றைய அமர்வில் சுட்டிக் காட்டப்பட்டது.

வாக்காளர் பட்டியல் மீள்பரிசீலனை செய்யப்பட்டதில் வலிகாமம் வடக்கில் மாத்திரம் 18 ஆயிரத்து 713 வாக்காளர்கள் குறைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் நேற்றைய அமர்வில் பேசப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வலிகாமம் வடக்கில் இன்னமும் பல இடங்கள் விடுவிக்கப்படவில்லை. சில இடங்கள் விடுவிக்கப்படும் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறிருக்கையில் வாக்காளர் பட்டியல் மீள்பரிசீலனையில் இருந்து இவ்வாறு பெருந்தொகையான வாக்காளர்கள் நீக்கப்பட்டமையானது நியாயமற்றது. நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இந்த முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. (ம319)



# உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் யாழ். போதனா மருத்துவமனையில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

**யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் யாழ். போதனா மருத்துவமனையில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. மருத்துவ மனையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் இந்த சிகிச்சை நிலையம் இருதய சிகிச்சை வல்லுநர் பூ.லக்ஸ்மனால் திறந்து வைக்கபட்டது.**

நிகழ்வில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர், பொது மருத்துவ வல்லுநர், பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரிவு ஆகியவை இணைந்து இப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் முதலாவது பணிப்பாளராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர், பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிதீவிரமான குருதி அமுக்கம், இளவயதில் குருதி அமுக்கம் போன்ற சிறப்புக் கவனிப்பு தேவையுள்ள நோயாளிகள் இந்த சிகிச்சைப் பிரிவால் சிகிச்சையளிக்கப்படுவார்கள். இதனூடாக மக்களுக்கு உயர் குருதியமுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஆராய்ச்சிப் பணிகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (வ-இ)

# வவுனியாவில் ரூ.460 க்கு உழுந்து கொள்வனவு

## கமநல திணைக்களம் தெரிவிப்பு

வவுனியா, ஜன.30

வவுனியாவில் உழுந்தை அத்தாட்சிப்படுத்தப்பட்ட விலையான 460 ரூபாவுக்கு கமநல திணைக்களம் கொள்வனவு செய்யத் தயாராகவுள்ளது என வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா மாவட்டத்தில் பல இடங்களில் உழுந்து அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் விவசாயிகளிடமிருந்து தனியார் துறையினர் மிகக் குறைந்த விலைக்கே உழுந்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதையடுத்து விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட விலையான 460 ரூபாவுக்கு உழுந்தைக் கொள்வனவுசெய்ய கமநல திணைக்களம் தயாராகவுள்ளது. இதனால் விவசாயிகள் அருகேயுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உழுந்தை வழங்க முடியும். ஒரு கிலோ உழுந்தை 460 ரூபாவுக்கு அதிகமாக தனியார் துறையினர் கொள்வனவு செய்வார்கள் எனில் தனியார் துறையினருக்கு வழங்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-18)

# தடம்புரண்டது பஸ் 13 பேர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜன.30

பொலநறுவையில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று பொலநறுவையில் மட்டக்களப்பு பிரதான வீதி புனானையில் நேற்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது குறித்த தனியார் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி தடம்புரண்டதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

# பணம் தராவிட்டால் ஆளைக் கடத்துவோம்

## எம்.பியின் பெயரைக் கூறி மிரட்டல்

வவுனியா, ஜன. 30

வட்டிப் பணத்தைக் கட்ட தாமதித்த பெண் ஒருவரின் வீடு புகுந்து இளைஞர் ஒருவர் மிரட்டியுள்ளார் என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் பெயரைப் பயன்படுத்தியே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அதனை அடியோடு மறுத்துள்ளார்.

வவுனியா சகாயமாதாபுரத்திலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

வட்டிக்கு பணத்தைப் பெற்றுக்கொண்ட பெண், அதை மீளச் செலுத்தவில்லை. இந்த விவகாரத்தால் பெண்ணுக்கும், வட்டிக்கு பணத்தைக் கொடுத்தவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் இணக்கசபையில் நிலுவையிலுள்ளது.

வட்டிக்குப் பணத்தைக் கொடுத்தவர் இன்னொரு இளைஞனுடன் பெண்ணின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்றுள்ளார்.

'நாளை காலைக்குள் பணத்தை வழங்கவேண்டும். இல்லாவிடின் கடத்துவோம். நாங்கள் திலீபன் எம்பியின் ஆள்கள்' என்று அந்த இளைஞர் மிரட்டியுள்ளார். இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினருக்கும் விடயம் தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் உடனடியாக பொலிஸாருடன், பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்று சம்பவத்தைக் கேட்டறிந்தார். அத்துடன் மிரட்டிய இளைஞரின் வீட்டுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் பொலிஸாருடன் சென்றார். அங்கு இளைஞன் இல்லை.

இந்த விவகாரம் தொடர்பில் வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ-18)

# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு திங்களன்று கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன.30

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கும்பாபிஷேகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகமும், விசேட பூஜையும் இடம் பெறவுள்ளன.

இதேவேளை, மாலை 4 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று பூந்தண்டிகையில் அம்பாள் வெளிவீதி வலம் வரும் நிகழ்ச்சியும் இடம் பெறும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார். (ற)

# திறக்கப்படாத கதவு

சாவகச்சேரி, ஜன. 30

கொரோனாக் காலத்தில் சுகாதார நடவடிக்கைகளுக்காக மூடப்பட்ட சாவகச்சேரி பொதுச் சந்தையின் கடலுணவு விற்பனை அலகின் நடுப்பகுதியில் உள்ள கதவு இதுவரை திறக்கப்படவில்லை என உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்கள்;

கொரோனாக் காலத்தில் கடலுணவு விற்பனை அலகுக்குச் செல்வோரின் நலன்கருதி ஒரு கதவு மட்டும் மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டு அங்குள்ள பணியாளரால் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், கை கழுவுதல் போன்ற பணிகள் கண்காணிக்கப்பட்டன. தற்போது அனைத்துச் சந்தைகளும் திறக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ள நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தையின் கடலுணவு விற்பனை அலகின் கதவு மட்டும் இன்னமும் திறக்கப்படவில்லை என்றனர்.

இது தொடர்பில் நகர சபையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது; கொரோனாக் காலத்தில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்புரைக்கமைய குறித்த விற்பனை அலகின் நடுப் பகுதியில் உள்ள கதவு மூடப்பட்டது. கொரோனா அச்சம் குறையாத நிலையில் கதவைத் திறப்பது சாத்தியம் இல்லை என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் என்றனர். (ப-9)

# போதையுடன் கைதான இருவருக்கு சமூகப்பணி

சாவகச்சேரி,ஜன.30

போதைப் பவுடர் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இருவரை தலா 150 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

போதைப் பவுடர் வைத்திருந்த இருவருக்கு எதிராக பொலிஸார் தாக்கல்செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, சமூகப் பணியில் ஈடுபடுத்த இருவரையும் நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (க-9)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தார்மீக ஆதரவே தேவை

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில், தமிழ் மக்களின் அரசியல் என்பது மீண்டும் தங்களுக்கானதும் சுயநிர்ணய உரிமையுடன் கூடியதும் தம் தனித்துவமான, தேசிய, கலாசார, பண்பாட்டு மரபுசார் அடையாளங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டியதுமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டது. அதன் விளைவாக ஒரு விடுதலைப் போராட்ட நகர்வையும் தமிழினம் முன்னெடுத்து, வரலாற்றில் தன் பெயரைப் பதிவும் செய்துகொண்டது.

காலனித்துவ சிந்தனையில் ஊறிப்போன பிரித்தானிய அரசு, அன்றிருந்த தனது சிந்தனைப் போக்குக்கேற்ப முடிவெடுத்து , இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிய போது, அது இலங்கையின் பேரினவாதிகளுக்கு மட்டுமே வழங்கிய சுதந்திரமாகவே அமைந்துவிட்டது. எதிர்காலத்தில் இந்த விவகாரம், தன்னை நோக்கியே விரல் சுட்டிக் குற்றம் காட்டும் ஒரு சர்வதேச விவகாரமாகிவிடும் என்று பிரித்தானியா அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை .

இன்று இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரம் ஐ.நா மனித உரிமைப் பேரவை அமர்வில் சர்ச்சைக்குரிய விவகாரமாக இனம்காட்டி நிற்கிறது. இந் நிலையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் பற்றி, பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்திச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைக்கு எதிரான நகர்வுகளுக்கு பிரிட்டனே தலைமை தாங்க வேண்டிய அவசியமும் உள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்த வேண்டிய நிலையும் எழுந்துள்ளது.


இதனை பிரிட்டிஷ் அரசு **1948** இல் தான் விட்ட வரலாற்றுத் தவறைப் புரிந்து கொண்டு, அதற்குப் பொறுப்பேற்று ஐ.நா மனிதஉரிமைப் பேரவை நிகழ்வில் இலங்கை விவகாரத்தில் இறுக்கமாக நடந்து கொள்ளுமா? என்பதே இன்றெழும் கேள்வியாகும்.

ஐ.நா மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைத் தமிழருக்கு நியாயம் கிடைக்கும் வகையில் காலதாமதம் எதனையும் ஏற்படுத்தாத ஒரு உறுதியும் இறுதியுமான தீர்வு எட்டப்படுமா? என்பதும் ஒரு பெரும் வினாக்குறியே. இந்த நிலையில் இலங்கை மீது முன்வைக்கப்படப்போவதாகப் பிரசாரப்படுத்தப்பட்டு வரும் , பல்வேறு தீர்மானங்களும், அழுத்தங்களும் இலங்கையின் மனித உரிமை விடயங்கள் தொடர்பிலான கோர சுய முகத்தைச் சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தினாலே போதும். அது தமிழ் மக்களின் சுதந்திரத்துக்குப் பின்னரான ஏழு தசாப்தத்துக்கும் அதிகமான போராட்டத்தையும், அதன் நியாயத்தன்மையையும் சர்வதேசசமூகத்துக்கு உறுதிப்படுத்தப் போதுமானதாக இருக்கும். அதேவேளை,ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ தமிழினத்துக்கு நியாயபூர்வமான ,நீதியைப் பெற்றுத்தரும் வல்லமையற்ற சக்திகளாகத் தம்மை வெளிப்படுத்தும் பரிதாப நிலை ஏற்படுமாயின், தமிழ் மக்கள் தமது சுதந்திர இருப்பைத் தக்கவைக்கும் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டி மீளெழுச்சி கொள்ள நேரிடும்போது, இலங்கை அரசால் அதற்குப் பயங்கரவாதம் என்ற முலாம் பூச முடியாமல் போய்விடும்.

அது எதிர்காலத்தில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்க வேண்டிய போராட்டங்களுக்குச் சர்வதேச ஆதரவுப் பலத்தைப்பெறத் தவிர்க்க முடியாததாக்கி விடும். அதே சமயம் அதுவே தமிழ் மக்களுக்குத் தார்மீக பலமாகவும் அவர்களின் ஆத்ம பலத்துக்கு ஆதார சுருதியாகவும் அமையும்.

அதன் அடிப்படையில், ஐ.நாவிடமும் சர்வதேச மனித உரிமைக் காப்பாளர்களிடமும் தமிழ் மக்கள் வேண்டி நிற்பது அவர்களின் ஆணித்தரமான தார்மீக ஆதரவுப் பின்பலத்தை மட்டுமே..!

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# தமிழுக்கு முதலிடம்; பணிகள் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜன.30**

**யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்தின் தரிப்பிடப் பலகையில் தமிழ்மொழியை முதலாவதாக மாற்றும் பணி மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்தின் தரிப்பிடம் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.**



அங்கு மாவட்ட பேருந்துகள் தரித்து நிற்கும் இடங்களைக் குறிக்கும் காட்சிப் பலகைகளில் சிங்கள மொழி முதலிலும் தமிழ் மொழி இரண்டாவது இடத்திலும் இடம்பெற்றமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் பணிப்பில் உள்ளூர் அச்சகம் ஒன்றின் ஊடாகத் தரிப்பிடப் பலகைகளை சீர்செய்ய சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கமைய தமிழ்மொழி முதலிலும் சிங்கள மொழி இரண்டாவது இடத்திலும் இடம்பெறும் வகையில் சீரமைக்கப்பட்ட பலகை ஒன்று இன்று முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

அதனையடுத்து அனைத்து பலகைகளும் இன்று (நேற்று) அகற்றப்பட்டு சீரமைத்து சில தினங்களுக்குள் மீளவும் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-26)

## அரச நிறுவனங்களில் தேசியக் கொடி பறக்கட்டும்

கொழும்பு, ஜன. 30



இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரையில் சகல அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை பறக்கவிடுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 3ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் அரச நிறுவனங்களை மின்விளக்குகளால் அலங்கரிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

(ஒ.இ)

## 60 வயது கடந்தோர் 200 பேர் உயிரிழப்பு

கொழும்பு.ஜன.30

நாட்டில் பதிவான கொரோனா மரணங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 200 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக, நாட்டில் இதுவரை 297 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 200 பேர் 60 வயதுக்கும் மேற்பட்டோர். ஏனையோர் நடுத்தர வயதுடையவர்கள் என்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (க-இ)

# தீவகப் பிரதேசங்களுக்கு இந்திய அரசின் பேருந்து?

*அங்கஜன் எம்.பி திட்டம்*

**ஊர்காவற்றுறை, ஜன.30**

**ஊர்காவற்றுறை, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கான பேருந்துகளை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்கு இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் திட்டமிட்டுள்ளார்.**

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த திட்டத்தைத் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களில் உள்ள நாம் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். பேருந்து பற்றாக்குறையால் மாணவர்கள், நோயாளிகள் மற்றும் முதியோர் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே எமக்குத் தேவையான பேருந்துகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இணைத்தலைவர்;

தேவையான பேருந்துக்கள் தொடர்பான திட்ட வரைவை எனக்குச் சமர்ப்பியுங்கள், அது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்று இந்திய அரசிடம் கோரிக்கை முன்வைத்து, பேருந்துகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார்; நயினாதீவு மற்றும் புங்குடுதீவிலிருந்து கூட ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு நோயாளர்கள் வருகின்றனர். ஆனால் இவர்கள் குறித்த இடங்களிலிருந்து இங்கு வருவதற்கு எவ்வித பேருந்துகளும் இல்லை. இதனால் மக்கள் சிரமப்படுகின்றனர் - என்றார். (ப-319)

# எரிபொருள் பவுசர் படகை தீவகத்துக்கு பெற்றுத்தருக

*மீனவர்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.30

எரிபொருள் பவுசர் பொருத்தப்பட்ட படகு ஒன்றை தீவகப் பிரதேசத்துக்கு பெற்றுத்தருமாறு அந்தப் பிரதேங்களைச் சேர்ந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மீனவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

தமது மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான எரிபொருளைப் பெற குறிகட்டுவான் அல்லது ஊர்காவற்றுறை துறைமுகங்களுக்கே வரவேண்டிய சூழல் உள்ளது என்றும், இதனால் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்றும் தெரிவித்த தீவகப் பிரதேசங்களில் உள்ள மீனவர்கள் இதற்குத் தீர்வாக தீவகப் பிரதேசங்களுக்கென எரிபொருள் பவுசர் பொருத்தப்பட்ட படகொன்றைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

மீனவர்களுடைய கோரிக்கையை கருத்தில் எடுத்த இணைத்தலைவர், அதற்கான திட்ட வரைவை எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்தார். (ப-319)

# சாரதிகள் நால்வருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன.30

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதி மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவர் உள்ளிட்ட நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையில் சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மணல் ஏற்றிய சாரதிக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் காப்புறுதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது.

# உரிய அதிகாரங்கள் அனைத்தும் வடக்கு காணி ஆணையாளருக்கு

*அமைச்சர் டக்ளஸ் உறுதி*

யாழ்ப்பாணம், ஜன.30

வடக்கு மாகாண காணி ஆணையாளருக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது என்று தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதுதொடர்பான கடிதம் சில தினங்களில் சம்பந்தப்பட்ட ஆணையாளருக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய மாகாண ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் கணிசமானவை வடக்கு மாகாண ஆணையாளருக்கு வழங்கப்படாமல் இருந்தன என்றும், குறித்த விடயம் வடக்கு மாகாண காணி ஆணையாளரால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ப-6)

# எழுவைதீவுக்கு தரமற்ற குடிநீர்

*மக்கள் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம், எழுவைதீவு பிரதேசத்துக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் தரமற்றதாக உள்ளது என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற, பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போதே இந்த குற்றச்சாட்டு அந்தப் பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பொறியியலாளர், எழுவைதீவுக்கான நீர் விநியோகக் குழாயில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இன்னும் ஒரு வார காலத்துக்குள் குறித்த பிரச்சினை சீர்செய்யப்பட்டு தரமான குடிதண்ணீர் விநியோகம் இடம் பெறும் - என்றார். (ப-319)

# விதிகளை மீறியோர் கைது



கொழும்பு, ஜன. 30

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிக்காமை தொடர்பில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் 910 நிறுவனங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட சோதனையில் உரிய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காத 103 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ரி5-இ)

*ஊர்காவற்றுறையில்*

# கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பண்ணை அமைக்க யோசனை

ஊர்காவற்றுறை, ஜன.30

ஊர்காவற்றுறை, பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்து, பண்ணை அமைப்பதற்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தாததால், நெற்செய்கைகள் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாதர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து, அவற்றை, பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளாக வழங்கலாம் என்ற யோசனையை முன்வைத்தார். இந்த யோசனைக்கு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தனது ஆதரவை வழங்கினார்.

“மற்றைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மாடு வளர்ப்புக் குறைவாகவே காணப்படுகிறது. ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு என இதுவரை ஒரு பாற்பண்ணை கூட இல்லை. மாடுகளைப் பிடித்து பண்ணை முறையில் கட்டி வளர்ப்பதன் ஊடாக எமது பிரதேசத்துக்கான வாழ்வாதாரம் உயர்வடையும். பிரதேசத்தின் பால் தேவையும் நிவர்த்தி செய்யப்படும்” என்று தனது கருத்தைப் பதிவு செய்தார். (ப-319)

# கேணியில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

திருமலை.ஜன.30

திருகோணமலை திருக்கடலூர் பிரதேசத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த, விசேட தேவையுடைய சிறுவன் ஒருவன் கேணியில் விழுந்து உயிரிழந்துள்ளான்.

கேணியில் விழுந்து கிடந்த பட்டத்தை எடுக்கச் சென்ற போது, சிறுவன் கேணியில் மூழ்கினான் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மற்றும் கடற்படை சுழியோடிகள் சிறுவனின் சடலத்தை மீட்டுள்ளனர். (சு-இ)

# தனிமைப்படுத்தப்படாத 14 பறவைகள் மீட்பு!

கொழும்பு, ஜன.30

குவைத்தில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 62 பறவைகளில் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பாது இரகசியமாக விற்பனை செய்யப்பட்ட 14 பறவைகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நாத்தாண்டி - துனகதெனிய பகுதியில் இந்தப் பறவைகள் மீட்கப்பட்டுள்ளன. 62 பறவைகளில் 42 பறவைகள் மாத்திரமே தனிமைப்படுத்தலுக்கு அனுப்பட்டுள்ளன.

எஞ்சிய 20 பறவைகளும் ஒரு ஜோடி 3 லட்சத்து 50 ஆயிரம் என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 14 பறவைகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஏனைய 6 பறவைகளும் ஏற்கனவே வேறு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ற-இ)



# ஐக்கிய பெண்கள் சக்தியின் தேசிய அமைப்பாளராக ஹிருணிகா!

கொழும்பு, ஜன.30

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஐக்கிய பெண்கள் சக்தியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு எதுல் கோட்டேயில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் வைத்து, அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அவருக்கான நியமனக் கடிதம் நேற்று வழங்கப்பட்டது. அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ற-இ)

# வீட்டு வன்முறைகளை கட்டுப்படுத்தத் திட்டம்

கொழும்பு.ஜன.30

வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படும் குடும்பப் பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாக்கவும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும், ஆலோசனை வழங்கவும் சிறப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறையில் 24 வயதுப் பெண்ணொருவர் தனது கணவரால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். அதேவேளை கினிகத்தேனப் பகுதியில் 27 வயதுப் பெண்ணொருவர் கணவனால் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய பொலிஸ் நிலையங்களின் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு அறிவுறுத்தப்படும்.

நாட்டிலுள்ள குடும்பப் பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாக்கும் விதத்தில் அவர்கள் மீது வன்முறையில் ஈடுபடும் கணவர் மற்றும் தந்தையர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பெண்களே நீங்கள் வீட்டில் ஏதாவது துஷ்பிரயோகம் அல்லது வன்முறையை எதிர்கொள்ள நேரிட்டால் 0112 444 444 எனும் எண்களூடாக பொலிஸாரின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தைத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க-இ)

## இந்தியாவுக்கு

# கிழக்கு முனையத்தை வழங்குவதற்கு மொட்டுக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு

**கொழும்பு, ஜன. 30**

**அதிகார பலத்தால் தலைவீங்கி, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முயற்சித்தால், அதன் பிரதிபலன்களை தற்போதைய அரசு அனுபவிக்க நேரிடும். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சீ தொலவத்த எச்சரித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய வளங்களை விற்பனை செய்யப் போவதில்லை என்று கூறியே நாம் ஆட்சிக்கு வந்தோம். அதற்கு மாறாக நாம் செயற்பட முடியாது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக செயற்படுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கினால் அதன் பிரதிபலன்களை நாம்தான் அனுபவிக்க வேண்டும். மக்கள் முட்டாள்கள் இல்லை.

போரை முடிவுக்கு கொண்டு வந்த மிகப்பெரிய தலைவர் மஹிந்த ராஜபக்ச. அவரையே மக்கள் 2015ஆம் ஆண்டு தோற்கடித்தனர். இரண்டு ஆண்டுகளில் நல்லாட்சி அரசுக்கு மக்கள் பாடம் புகட்டினர்.

அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எங்களுடன் இருக்கவில்லை. அவர்கள் அதிகாரத்தால் தலைவீங்கிச் செயற்பட்டனர். அவ்வாறு செயற்படுவது பாதகமானது - என்றார். (ஒ.இ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா

திருகோணமலை, ஜன. 30



கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட காக்காமுனை கிராம சேவகர் பிரிவில், 9 மாத சிசு உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டுள்ளது என குறிஞ்சாக்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி ஏ.எம்.எம் அஜித் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, திருகோணமலை நீதிமன்றத்தில் பணிபுரியும் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர், கடந்த 21ஆம் திகதி முதல் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார். இந்நிலையில், அவருக்கு வைரஸ் தொற்று அறிகுறி காணப்பட்டதால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவரது மனைவி, 9 மாத சிசு மற்றும் 5 வயதுக் குழந்தை ஆகியோரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி5-இ)

# தீவிர சிகிச்சைப் பிரிவில் பவித்ரா

கொழும்பு, ஜன. 30



சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி அங்கொடையிலுள்ள தொற்று நோய்கள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவையிலுள்ள சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுமுன்தினம் காலை கொத்தலா பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் அவர் குணமடைந்து வருகிறார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை அவரது கணவர் மற்றும் மகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ரி5-இ)

# கொரோனாப் பரவலுக்கு அலட்சியப்போக்கே காரணம்

கொழும்பு, ஜன. 30

கொரோனாத் தொற்று நாட்டில் பரவுவதற்கு மக்களின் அலட்சியமே வழிவகுத்துள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்தது.

ஊரடங்கு உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள், அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற மறந்துவிட்டார்கள் என அச்சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்தார்.

எனவே, சுகாதார அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் தங்களால் முடிந்த அனைத்தும் செய்து வருகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ரி5-இ)

# யாசகம் பெற்று வந்த முதியவருக்கு கொரோனாத் தொற்றுறுதி

கொழும்பு, ஜன. 30

முதியங்கனய ரஜமகா விகாரைக்கு அருகில் யாசகம் பெற்றுவந்த முதியவர் (வயது 60) ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுவாசக் கோளாறு காரணமாக அவர் பதுளை பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றபோது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், குறித்த யாசகரை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்புவதற்கு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ரி-5இ)





## "சிரித்திரன்" சஞ்சிகை மீள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன, 30

யாழ்-நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் சிரித்திரன் சஞ்சிகையின் மீள் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சஞ்சிகையானது 1963 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வெளியிடப்பட்ட இந்தச் சஞ்சிகையானது 2003 ஆம் காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டது மீண்டும் இந்த ஆண்டு முதல் மீள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ் - பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் விரிவுரையாளர் ரகுராம், முன்னாள் ஆய்வுநிலைப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், முன்னாள் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிவலிங்கராசா, யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், எழுத்தாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் வாசகர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ரி5-321)

## கூட்டணியில் இணைய கதவு திறந்தே உள்ளது

### கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு. ஜன. 30

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்படும் ஐக்கிய மக்கள் கூட்டணியில் எந்த அரசியல் கட்சியும் அல்லது அமைப்புகளும் இணைந்து கொள்ள முடியும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமையை மாற்ற அரசுக்கு எதிரான அனைத்து சக்திகளும் ஒன்றிணைய வேண்டும். இதற்காகவே ஐக்கிய மக்கள் கூட்டணி உருவாக்கப்படுகிறது. இந்தக் கூட்டணியில் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# பிரதேச செயலாளர் இடமாற்றம்: செட்டிக்குளத்தில் ஆர்ப்பாட்டம்!

**வவுனியா, ஜன.30**

**வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து செட்டிக்குளம் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் தமக்கு சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளார் எனவும் அவரை இடமாற்றம் செய்யாது மீண்டும் இதே பகுதிக்கு நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "ஏன் இந்த அவசர இடமாற்றம், நிறுத்து நிறுத்து எம்மவரை மாற்றுவதை நிறுத்து, எவருக்கு இலாப மீட்ட இந்த இடமாற்றம்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் கு.திலீபன் விஜயம் செய்திருந்ததுடன் இந்தக் கோரிக்கைக்கான தீர்வை வழங்குவேன் எனவும் உறுதிமொழி அளித்துள்ளார். (ந-110)



## குப்பைகளால் அழுக்காகிறது கஸ்தூரியார் 1ஆம் ஒழுங்கை

### மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியையும், கே.கே.எஸ் வீதியையும் இணைக்கும், கஸ்தூரியார் முதலாம் ஒழுங்கையில் பலர் குப்பைகளைக் கொட்டிவிட்டுத் தப்பிச் செல்கின்றனர் என்றும், இதனால் அந்த வீதியின் அருகில் உள்ள நாம் பாதிக்கப்படுகின்றோம், என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தங்களுடைய வீட்டுக் கழிவுகளை, பைகளில் போட்டுக்கொண்டு வரும் நபர்கள், ஆள்கள் நடமாட்டம் அற்ற வேளையில் அந்த வீதியினுள் புகுந்து அவற்றைக் கொட்டிவிட்டுத் தப்பித்துச் செல்கின்றனர். நேற்றுக் காலை, நண்பகல் என இரண்டு வேளைகளில் இருவர் குப்பைகளை கொட்ட வந்தபோது அகப்பட்டனர். அவர்களில் ஒருவர் தான் குப்பை கொட்டவில்லை என்றும் ஏற்கனவே குப்பையுடன் போடப்பட்டிருந்த பொலித்தீன் பையை எடுத்துப் பார்த்தேன் என்றும் தெரிவித்தார். பின்னர் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவை சோதனையிட்டபோது குறித்த நபர் குப்பை கொட்டுவது தெரியவந்துள்ளது. தங்களுடைய வீட்டுக் கழிவுகளை இங்கு கொண்டுவந்து கொட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது. எனவே யாழ்ப்பாணம் மாநகர சபை இது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும். மாநகர சபையின் அறிவுறுத்தல்களையும் மீறி இவ்வாறு குப்பை கொட்டுபவர்களுடைய ஒளிப்படங்களை மாநகரசபை பகிரங்கப்படுத்த வேண்டும் என்றனர். (ப)

## மேய்ச்சல் தரைக்கான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு.ஜன.30

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையை உடனடியாகப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி கவனவீர்ப்பில் ஈடுபட்ட 8 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற பதில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதிகள் 8 பேரையும் பதில் நீதிவான் பிணையில் விடுவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி பட்டிப்பொங்கலன்று கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 8 பேரின் முழுமையான பெயர்கள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவிதிகள் சட்டத்தின் கீழ், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள்மீது ஏறாவூர் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-இ)

# சாவகச்சேரியில் இதுவரை 1559 பேருக்கு பி.சி.ஆர்

சாவகச்சேரி, ஜன.30

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கடந்த 12 நாள்கள் மேற்கொண்ட எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையில் சேகரிக்கப்பட்ட ஆயிரத்து 559 பேரின் பி.சி.ஆர் மாதிரிகள் இதுவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன. மருத்துவ சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் நேற்றுக் காலை வரை எழுதுமட்டுவாழ் மற்றும் நாவற்குழி ஆகிய பகுதிகளில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தினமும் அதிகாலை வேளையில், கொரோனாத் தொற்று ஏற்பட்ட பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணம் வருகின்ற பயணிகள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மரக்கறி வகைகள் ஆகியவற்றை ஏற்றிவரும் வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் பயணிகள் மற்றும் வாகனங்களின் நடத்துநர்கள் போன்றோர் இந்த எழுமாறான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசோதனை முடிவுகளில் நாவற்குழி, மந்துவில் வடக்கு, மன்னார், வவுனியா, கொழும்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் சுதுமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## குணமடைந்தார் பியல் நிஸாந்த

கொழும்பு, ஜன. 30
கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் கொக்கல பிரதேசத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.
இதேவேளை, கொவிட் தொற்றுக்குள்ளான 7ஆவது நாடாளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ சிகிச்சைக்காக கொழும்பு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ.இ)

# ஈஸ்ரர் தாக்குதலை ஐ.எஸ். நடத்தவில்லை

## சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் ஷானி அதிர்ச்சி தகவல்

கொழும்பு, ஜன. 30
**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை. இலங்கையில் தாக்குதல் நடைபெற்று முடிந்த பின்னர் அதனை அந்த அமைப்பு உரிமை கோருவதற்கான நடவடிக்கைகளை 'மாத்தளை ஸஹ்ரான்' மேற்கொண்டிருந்தார். இவருடன் தொடர்பிலிருந்த தேசிய உளவுச் சேவை அதிகாரியை விசாரணை செய்ய எமக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. இவ்வாறு சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எனது ஆலோசனைகளின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.டி.) இணையக் குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் மேற்பார்வை அதிகாரியான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தர்சிகா குமாரி மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் சேனாரத்ன ஆகியோர் முன்னெடுத்த விசாரணைகளில் 'மாத்தளை ஸஹ்ரான்' தொடர்பில் தெரியவந்தது.
அதனைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.
இலங்கையில் தாக்குதல் நடைபெற்று முடிந்த பின்னர், அதற்கு உரிமை கோருமாறு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கான கோரிக்கை அவர் ஊடாகவே சென்றதைக் கண்டறிந்தோம்.
'மாத்தளை ஸஹ்ரானுடன்' 'சொனிக்' என்னும் புனை பெயரில் செயற்படும் தேசிய உளவுச் சேவை அதிகாரி ஒருவர் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளின் ஊடாகத் தெரியவந்தது. அவரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ள எமது திணைக்கள அதிகாரிகள் சென்றார்கள். தேசிய உளவுச் சேவையின் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர், என்றார்.
விசாரணை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி பெரேரா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஷானி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு நேரடித் தொடர்பு இல்லை. இது எமது ஆரம்ப விசாரணைகளிலேயே தெரியவந்தது. இந்தத் தாக்குதலை நெறிப்படுத்தியவர் யார் என்ற கேள்வி இன்னமும் தொடர்கின்றது.
எந்தவொரு பயங்கரவாத அமைப்பின் தலைவரும், தற்கொலைத் தாக்குதலின் முதல் தாக்குதலின் போதே உயிரிழந்ததாக வரலாறு இல்லை. எனவே ஸஹ்ரானை இயக்கியவர்கள் யார் என்ற கேள்வி இன்னமும் உள்ளது, என்றார். (ஒ.இ)

## 45 மாணவர்களுக்கு ஒரு வகுப்பறை!

கொழும்பு, ஜன. 30
தேசிய பாடசாலையில் வகுப்பறை ஒன்றினுள் இருக்க வேண்டிய அதிகூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 என்று கொழும்பு கல்வி அமைச்சின் செயலர் கபில பெரேரா தெரிவித்தார்.
வகுப்பறை ஒன்றினுள் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதால் தரமான கல்வியை வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.
தரம் ஒன்றுக்குரிய வகுப்பறையில் ஆகக் கூடியது 40 மாணவர்கள் மாத்திரமே இருக்க முடியும் என்றும் ஏனைய தரங்களின் வகுப்பறைகளில் ஆகக் கூடியது 45 மாணவர்கள் மாத்திரமே இருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ.இ)

## சுகாதார அறைகளை வழங்கும் அமெரிக்கா

கொழும்பு, ஜன. 30
இலங்கை முழுவதும் உள்ள 120 பாடசாலைகளுக்கு சுகாதார அறைகளை அமெரிக்கா வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும், கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையிலும் இந்தச் சுகாதார அறைகள் அமையவுள்ளன. கல்வி மற்றும் சுகாதார அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து இந்தச் செயற்றிட்டத்தை அமெரிக்கா முன்னெடுக்கவுள்ளது.
படுக்கைகள், மெத்தைகள், முதலுதவி உபகரணங்கள், நகர்த்தக்கூடிய மறைப்பு திரைகள் என்பனவற்றை இந்தச் சுகாதார அறைகள் கொண்டிருக்கும். (ஒ.இ)



## நோர்வே தூதுவர்! சஜித்தை சந்தித்தார்

கொழும்பு, ஜன.30
இலங்கைக்கான நோர்வே தூதுவர் திரினா யுரான்லி எஸ்கடெல் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜதந்திர உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், கொரோனா அச்சுறுத்தலில் இராஜதந்திர உதவிகளின் முக்கியத்துவம் தொடர்பிலும், எதிர்க்கட்சித் தலைவர் தூதுவரின் கவனத்தை ஈர்த்தார்.
இந்தச் சந்திப்பில், ஹர்ஷா டி சில்வா, எரான் விக்ரமரத்ன, நிரோஷன் பெரேரா மற்றும் ரோஹன் பல்லேவத்த ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-இ)

## மஹிந்தவை கொல்ல சூழ்ச்சி!

கொழும்பு, ஜன. 30
பிரதமர் மஹிந்த ராஜபக்சவை கொலை செய்வதற்கான சூழ்ச்சிகள் பலரிடத்தில் இருக்கின்றன என பிரதமரின் தனிப்பட்ட செயலர் தனசிறி அமரதுங்க தகவல் வெளியிட்டுள்ளார்.
பிரதமர் மஹிந்த ராஜபக்ச உயிரிழந்துவிட்டார் எனவும் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது எனவும் கடந்த வார இறுதியில் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வைரலாகப் பரவின. இந்த நிலையில் சமூக வலைத்தளங்களில் வெளியான தகவல் குறித்தும், அதன் உண்மை நிலவரங்களையும் ஊடகமொன்றுக்குத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ.இ)

### விசேட சுற்றிவளைப்பு

## 20 முச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் பறிமுதல்!

மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகள் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
இதன்போது 9 ஆயிரத்து 864 முச்சக்கர வண்டிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இதில் 20 முச்சக்கர வண்டிகளில் மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
இதனால் இந்த 20 முச்சக்கர வண்டிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த முச்சக்கர வண்டிகள் திருடப்பட்டுள்ளன எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-இ)

## ட்ரோன் கமராக்கள், பலூன்களை பறக்கவிடுவதைத் தவிர்க்கக் கோரிக்கை

கொழும்பு, ஜன.30
கொழும்பு வான் பரப்பில் ட்ரோன் கமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயரப் பறக்கவிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை விமானப் படைத் தலைமையகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விமானப் படை விமானங்கள் நேற்று முன்தினம் தொடக்கம் கொழும்பு வான் பரப்பில் சுதந்திர தினத்துக்கான வான்சாகச ஒத்திகையை ஆரம்பித்துள்ளன. இதனால் ஜனவரி 28ஆம் திகதி முதல் பெப்ரவரி 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்படி வான் பரப்பில் ட்ரோன் கமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயரப் பறக்கவிடுவதை முழுமையாக தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ-இ)

# கிளிநொச்சியில் நெல் கொள்வனவு

## விவரங்களை வெளியிட்டார் மாவட்டச் செயலர்

**கிளிநொச்சி, ஜன. 30**

**கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த வாரம் முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என மாவட்டச் செயலர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

நெல் கொள்வனவு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட மாவட்டச் செயலர், ஒன்று தொடக்கம் 5 ஹெக்டேயர் வரையில் விவசாயம் மேற்கொண்டவர்கள் ஆயிரம் கிலோ நெல்லை, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கவேண்டும். 2 தொடக்கம் 5 க்கு மேற்பட்ட ஹெக்டேயரில் விவசாயம் மேற்கொண்டவர்கள் 5 ஆயிரம் கிலோ நெல்லை வழங்க முடியும்.

14 தொடக்கம் 24 வீதத்துக்கு உட்பட்ட ஈரப்பதன் உடைய ஒரு கிலோ சம்பா மற்றும் கீரிச் சம்பா என்பவை ஒரு கிலோ 52 ரூபாவுக்கும், சிவப்பு பச்சை 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்.

14 தொடக்கம் 24 வீதத்துக்கு கூடிய ஈரப்பதன் உள்ள நெல்லை உலர்த்துவதற்கு கிலோ ஒன்றுக்கு 4 ரூபாவும், உலர்த்திய நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கொண்டு செல்ல போக்குவரத்துக்காக தூரத்தின் அடிப்படையில் 1 ரூபாவும் வழங்கப்படும்- என்றார். (ஓ.113)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் தைப்பூச திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. சுவாமி வீதியுலா வந்து ஆலய வயலில் புதிர் எடுக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது. (வ-159)

## குருதிக்கொடை முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30

அமரர் வீ. அரவிந்தனின் 100ஆவது நாள் நினைவாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குருதிக்கொடை முகாம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. குருதிக் கொடையாளிகளை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ.5)

## சுற்றுலா மையமாக கண்டி நகர் மாற்றப்படும்

கண்டி, ஜன. 30

பேராதனை தாவரவியல் பூங்கா உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படும் என அரசு தெரிவித்தது.

குறித்த பகுதிக்கு நேற்றுமுன் தினம் விஜயம் மேற்கொண்டிருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கண்டி நகரத்துக்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

மேலும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான பயணத்திட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். (ரி5-இ)

## இந்திக அனுருத்தவுக்கு கொரோனா 'நெகடிவ்'

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவுக்கு கொரோனாப் பாதிப்பு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாப் பாதிப்புக்குள்ளான கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுடன் ஊடக நிகழ்ச்சி ஒன்றில் இந்திக அனுருத்த கலந்து கொண்டார். இதையடுத்து இந்திக சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளானார். இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என அவரது ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (வ-இ)



## பொருண்மியம் நலிந்தோருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள்!

காங்கேசன்துறை, ஜன.30

காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தினர், கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கான இலவச கண் சிகிச்சை முகாமை நேற்றுமுன் தினம் கோப்பாய் வளர்மதி சன சமூக நிலைய மண்டபத்தில் நடத்தினர்.

கழகத் தலைவர் லயன் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பார்வையில் குறைபாடு காணப்பட்ட பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கொழும்பு1 லயன்ஸ் கழகப் பிரதிநிதி லயன்ஸ் பிளசீடஸ் பீற்றர் கலந்து கொண்டு, மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (ற-9)



## விடுதலை வேண்டி விளக்கேற்றல்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி விளக்கேற்றும் நிகழ்வு மன்னாரில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் எஸ்.திலீபன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இதன்படி, மன்னார் தரவன் கோட்டை சிறி முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் தோட்டவெளி, பறப்பான்கண்டல், இசங்கன்குளம் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் விளக்கேற்றல்கள் இடம்பெற்றன. அரசியல் கைதிகளின் உறவுகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (வ-56)

# இனம் சார்ந்த சின்னங்களை பாதுகாக்க சபையில் தீர்மானம்

கொடிகாமம், ஜன. 30

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள தமிழ் இனம் சார்ந்த அனைத்துச் சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் அமர்வு கடந்த 26ஆம் திகதி சபை மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சி.கஜன் தீர்மான வரைவை சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு கண்டனம் வெளியிட்டார். எமது இனத்தின் வரலாறுகளை அடுத்த சந்ததிக்கு கடத்தக் கூடாது என்ற நோக்கில்தான் இவ்வாறு நினைவுத் தூபிகள் அழிக்கப்படுகின்றன.

எமது சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள தமிழினம் சார்ந்த அனைத்துச் சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அல்லாரை சீலன் பூங்கா, விடத்தற்பளையில் அன்னைபூபதி நினைவுத் தூபி, மன்னங்குறிச்சியில் செல்லப்பா சுவாமிகள் சமாதி, ஒட்டுவெளியில் காசிப்பிள்ளை சுவாமி சமாதி ஆகிய சின்னங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

நினைவுச் சின்னங்களை இனங்கண்டு ஆவணப்படுத்திய பின்னர் அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'நிலாவரைக் கிணறு தொல்பொருள் திணைக்களத்தால் அகழ்வாராய்ச்சி செய்யப்படுகிறது. அதேபோல் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள நினைவுச் சின்னங்களை வெளிப்படுத்தினால் எமது கையைவிட்டுப் போக வாய்ப்பு உள்ளது. ஆகையால் இந்தப் பிரேரணையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் [illegible] சு.இரத்தினசிங்கம் தெரிவித்தார். (ஓ.159)

## ரயில் விபத்தில் சிக்காது தப்பியது கனரக வாகனம்

*எழுதுமட்டுவாழில் சம்பவம்*

ரயில் வரும் நேரத்தில் ரயில் கடவையில் சிக்குண்ட வாகனம் ஒன்று மயிரிழையில் மீட்கப்பட்ட சம்பவம் எழுதுமட்டுவாழில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, எழுதுமட்டுவாழ் ஆசைப் பிள்ளை ஏற்றத்தில் அதிவேக ரயில் வரும் நேரம், சமிஞ்சைகளைப் பொருட்படுத்தாமல் கனரக வாகனம் ஒன்று கடவையைக் கடக்க முயன்ற சமயத்தில் வாகனம் செயலிழந்து கடவையின் நடுவில் சிக்குண்டுள்ளது. இதன் போது அங்கிருந்த சில இளைஞர்கள் ரயில் நெருங்கி வரும் முன்னர் வாகனத்தை கடவையை விட்டு வெளியேற்ற முற்பட்டும் அது பயனளிக்கவில்லை. ரயில் நெருங்கி வருவதை அவதானித்த இளைஞர்கள் உடனே தமது மேலாடையைக் கழட்டி ரயிலை நிறுத்த கோரியுள்ளனர். ஆனாலும் அதிவேக ரயில் என்பதால் அதனால் வேகத்தை உடனடியாக கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தச் சமயத்தில் அந்த வழியூடாக வந்த இராணுவத்தினர் விரைந்து செயற்பட்டு வாகனத்தை அங்கிருந்து தள்ளி வெளியேற்றி விபத்தைத் தவிர்த்தனர். (வ-113)

## இன்றைய நாள்



**மேடம்:** பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசித் தீர்வு காண்பீர்கள். நண்பர்கள் வீட்டு விஷயங்களுக்கு நிறைய உதவி செய்வீர்கள். சிறிய அதிர்ஷ்டம் ஒன்று குடும்பத்துக்கு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** பணியிடத்தில் மற்றவர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பத்தைத் தீர்த்து வைப்பீர்கள். விருந்தினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வெளியூரிலிருந்து வருபவர் நல்ல செய்தி கொண்டு வருவார். தானதர்மம் செய்து பலரின் வாழ்த்தைப் பெற்று மகிழ்வீர்கள். புதிதாகச் சந்தித்தவர்களால் சந்தோஷம் அதிகரிக்கும்.

**கடகம்:** நாடி வந்தோருக்கு உதவிசெய்து மகிழ்ச்சி அடையச் செய்வீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் பிள்ளைகளால் மதிப்புக் கிடைக்கும்.

**சிம்மம்:** உறவினர்கள் மத்தியில் பெண்களுக்கு மதிப்பு, மரியாதை கிடைக்கும். புதிய விடயங்களில் இறங்குவதற்கு முன் யோசித்துச் செய்யுங்கள்.

**கன்னி:** குடும்ப வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் கடமை முடியும். ஒரு சிலருக்குப் பணியிட இடமாற்றம், ஊர் மாற்றம் அமையும். பார்க்கும் வேலையை அவசரப்பட்டு விட்டுவிட வேண்டாம்.

**துலாம்:** பிள்ளைகளின் செயலால் குடும்பத்துக்கு நன்மை கிட்டும். நீங்கள் திட்டமிட்டுச் செய்யும் எந்தவொரு விடயமும் ஜெயிக்கும். 'உதவிக்காக தவறான நபர்களை அணுக வேண்டாம்.

**விருச்சிகம்:** நடுநிலையான செயலின் காரணமாக பாராட்டப்படுவீர்கள். இன்று குழந்தைகளுக்கு நல்வாழ்வு கிடைக்க ஏற்பாடாகும். மனதின் பளு குறைவதால் உற்சாகம் கூடுதலாகும்.

**தனுசு:** நல்ல திட்டங்கள் தீட்டுவீர்கள். அக்கம் பக்கத்தினரால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். போட்டி, பொறாமையால் பிரச்சினையை சந்திக்க நேரிடும். பயன் அறிந்து பயணம் மேற்கொள்ளலாம்.

**மகரம்:** சிறு சங்கடங்கள் இருக்கும். எதிர்பாராத செலவு உண்டு. நேற்றைய கவலைகள் தீர்ந்து நிம்மதியாக உணர்வீர்கள். அரசாங்கத்திடம் இருந்து வரவேண்டிய அனுமதி கிடைக்கும்.

**கும்பம்:** வழிபாட்டில் இத்தனை காலம் இல்லாதிருந்த நம்பிக்கை வரும். பல நாளாக வாடகை சம்பந்தமாக இருந்த மனஅழுத்தம் தீரும். கடந்த காலத்தை திரும்பிப் பார்த்து திருத்திக் கொள்வீர்கள்.

**மீனம்:** திட்டமிட்ட விஷயம் ஒன்றை மாற்றி அமைக்க நேரிடலாம். பல கால வருத்தங்கள் மாறும். மனம் விட்டுப் பேசுவீர்கள். யாரை நம்ப வேண்டும் என்பது தீர்மானமாகும். வேலை அதிகரிக்கும்.

# கட்சியை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும்

## கோருகிறார் நவீன்



கொழும்பு. ஜன. 30

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடக்கம் அனைத்து மட்ட பதவி நிலைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒருபோதும் வெளியேறமாட்டேன். கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படவில்லை. அதனால் எனக்கு வழங்கப்பட்ட தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்க முடியாது. நாட்டில் தற்போது சிறந்த அரசும், பலமான எதிர்க்கட்சியும் கிடையாது. ராஜபக்சக்களின் பலவீனமான அரசைத் தோற்கடிக்க, அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட வேண்டும்.

பலம் வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியை, நாட்டு மக்கள் புறக்கணித்தமைக்கான காரணம் என்ன, தவறுகளை எவ்வாறு திருத்திக் கொள்ள வேண்டும் என்ற விடயங்கள் குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும்–என்றார். (ஒ.இ)



# பாடசாலை மாணவருக்கு உபகரணங்கள் வழங்கல்

மன்னார், ஜன.30

பெற்றோரை இழந்து வாழும் பொருண்மியம் நலிந்த 25 மாணவர்களுக்கு தலா 2500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது யூபிலி விழாவை முன்னிட்டு 1986ஆம் மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் கல்வி பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் இவை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன்படி, மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளில் கல்வி பயிலும் 250 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன் முதல் கட்டமாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் 25 மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட்டால் பாடசாலை உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. (வ-60)

# புதிய போதைப்பொருளுடன் மஹரகமவில் ஒருவர் கைது!



கொழும்பு, ஜன.30

இலங்கையில் புதிய வகைப் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் மஹரகமப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரெவ்வல பகுதியில், குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து ஒரு கிலோ ஐந்து கிராம் டெட்ரா ஹைட்ரோ கெனபினோல் எனப்படும் ஏஷ் ஒயில் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 35 இலட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றத் தடுப்புப் பிரிவினர் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர். (ற-இ)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் விசேட பூஜை நிகழ்வுகள் இடம் பெற்றன. இதன்போது முருகப்பெருமான் பக்தர்கள் சகிதம் தேரில் பவனி வந்தார். (ற)

# கொரோனா ஒழிப்பிலேயே அரசின் கவனம் உள்ளது

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன், ஜன.30

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆனால் அரசாங்கம் கொரோனாப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களையே முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். ஹற்றனில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குப் பதிலாக வேறு நாடுகளுக்கு கொடுத்திருக்கும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (வ-இ)

### தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தல்

# மாகாணங்களின் அதிகாரங்களை பிடுங்குவதற்கு அனுமதியாதீர்கள்

### வடக்கு ஆளுநருக்கு அவைத் தலைவர் காட்டமாகக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 30

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கண்டனம் வெளியிட்டுள்ளார். இத்தகைய செயற்பாடு மாகாணத்தின் அதிகாரத்தை கொழும்பு அரசு கையகப்படுத்தும் நிலைமை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு கடந்த 27ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதம் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரால் ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாண மாவட்டத்தின் 10 பிரதான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன எனவும், அவை வடக்கு மாகாண சபை நிர்வாகத்திலிருந்து கொழும்பு கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதாகவும் கடந்த வாரம் ஊடகச் செய்திகளின் மூலமாக அறிய வந்துள்ளது.

குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத அரச பாடசாலைகள் அரசமைப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயம் என்ற ரீதியில் இந்த பத்துப் பாடசாலைகளும் இதுவரை மாகாண கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தவையாகும். அவற்றை கொழும்பு அரசு கையகப்படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் இவ்வாறான முயற்சிகள் யாவும் இங்கே மறுதலிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டும். இந்த நிர்வாக அதிகார மாற்றத்தின் தர்க்கவியல் புரிந்துகொள்ளக் கூடியதாக இல்லை. அதாவது நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக இருப்பினும் அவை மாகாண சபையால் சீர்திருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வது ஒரு பிரச்சினை அல்ல.

அவற்றை விட தேசிய பாடசாலைகளுக்கு ஏதாவது மேலதிக வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாயின் அவற்றை மாகாண நிர்வாகத்தின் மூலம் வழங்க முடியும். அவற்றுக்காக ஏற்கனவே நடைமுறையிலிருந்த மாகாண சபை அதிகாரத்தைப் பிடுங்கி கொழும்புக்கு கொண்டு செல்லுதல் அதிகாரப்பகிர்வை முழுமையாக மீறும் செயற்பாடாகும்.

இந்தச் செயற்பாடு சமூகத்தில் தேசிய பாடசாலைகள் ஏதோ தரமுயர்ந்தவை, ஏனையவை தரம் குறைந்தவை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பதை மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல.

மேலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபை இல்லாத சூழ்நிலையில் இவ்வாறு செய்வது ஜனநாயக விரோதமானது என்பதையும், இந்தச் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்பதையும் எனது தீர்க்கமான வேண்டுகோளாக பதிவு செய்து கொள்கிறேன்.

தற்போது வடக்கு மாகாண சபையின் சட்டரீதியான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கின்றேன், என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ.5)



முல்லைத்தீவில்

## தைப்பூசத் தினத்தன்று ஏர் நிலப் பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜன.30

ஏர் நிலத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு புலம்பெயர் படைப்பாளி து.திலக் மற்றும் புலம்பெயர் தமிழுறவு து.லிங்கேஸ்வரன் ஆகியோரது ஒழுங்கமைப்பில் நேற்றுமுன்தினம் இந்துபுரம் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

இந்தப் பொங்கல் நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், அந்தப் பகுதி இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், விவசாயிகள் மற்றும் ஏர் நிலச் செயற்பாட்டாளர்கள், கவிஞர் மன்னார் பெனில், கவிஞர் புரட்சி, பாடலாசிரியர் தே.பிரியன், கவிஞர் முருகண்டி லக்சிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தமிழர் பண்பாட்டை சிறப்பிக்கும் வகையில், இந்தப் பொங்கல் நிகழ்வு தைப்பூசத் தினத்தன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## வெள்ளத்திலும் அறுவடை

சாவகச்சேரி, ஜன. 30

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை பண்ணப்பட்ட வயல்களில் தைப்பூச தினத்தைத் தொடர்ந்து அறுவடைகள் ஆரம்பமாகியுள்ளன. வயல்களில் வெள்ளம் காணப்படுகின்ற போதிலும் இயந்திரம் மூலமும், ஆள்கள் மூலமும் அறுவடைகள் ஆரம்பமாகியுள்ளன. பிரதேசத்தின் பெருமளவு வயல்களில் நெற் கதிர்கள் காய்ந்து வெள்ளத்தில் சாயும் நிலை காணப்படுவதாலும், மீளவும் மழை பெய்யும் சாத்தியம் உள்ளதாலும் அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகிறது. இயந்திரம் மூலம் அறுவடை செய்ய பரப்புக்கு 400 ரூபா அறவிடப்படுகிறது. ஆள்கள் மூலம் அறுவடை மேற்கொள்வோர் அறுவடை செய்த பயிர்களை வயல் வரம்புகளில் வைத்து அங்கிருந்து வாகனங்களில் வீடுகளுக்கு கொண்டு செல்வதைக் காண முடிகிறது. கடந்த வருடம் தைப்பூசத் தினத்துக்கு முன்னர் அனைத்து வயல்களிலும் இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## குடும்பப் பெண் விபத்தில் காயம்!

வவுனியா, ஜன.30

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அவர் தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மணிக்கூட்டுக் கோபுரம் நோக்கி, மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண் ஒருவரை, பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து காரொன்று மோதி விபத்துக்குள்ளாக்கியது.

இதன்போது காயமடைந்தவர் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், விபத்தை ஏற்படுத்திய கார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-110)

## தரமற்ற பொருள் பயன்பாட்டால் இரு ஆண்டுகளில் வீதி சேதம்

### பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன.30

புனரமைக்கப்பட்டு இரு ஆண்டுகளிலேயே கடுமையான சேதங்களை ஸ்கந்தபுரம் வீதி சந்தித்துள்ளது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் அக்கராயன் பிரதேச மருத்துவமனைச் சந்தியில் இருந்து அணைக்கட்டு வழியாக ஸ்கந்தபுரம் வயல் வெளி வரை இந்த வீதி புனரமைக்கப்பட்டது. ஆனால் ஸ்கந்தபுரத்தில் இருந்து வயல் வெளிவரையான 1 கிலோமீற்றர் வீதி கடுமையாக சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் தமது வெட்டு இயந்திரங்களையும் நெல் மூடைகளையும் எடுத்து வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அக்கராயனில் இருந்து இவ்வழியாக நடைபெறுகின்ற ஒரேயொரு யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை இவ்வீதியால் பெரும் சிரமங்களுடன் நடைபெறுகின்றது. வீதி புனரமைப்பின்போது தரமான கிரவல் மண் பயன்படுத்தாமல் தரம் குறைந்த களிமண் பயன்படுத்தப்பட்டு வீதி புனரமைக்கப்பட்டதால் இவ் வீதி சேதமடைந்துள்ளது என இப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. குறித்த வீதி புனரமைப்பின் போது தரமற்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பால் கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதி பொது அமைப்புக்களால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. (வ-ரி2)



## புல்வெட்டும் இயந்திரம் அன்பளிப்பு

கொடிகாமம், ஜன.30

வரணி மத்திய கல்லூரிக்கு புல்வெட்டும் இயந்திரம் ஒன்று கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் க.கேதீஸ்வரனால் அதிபர் ப.செல்வவிநாயகத்திடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று புலம்பெயர் உறவுகளால் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (வ-159)

# கொவிட்19 தடுப்பூசி தொடர்பில் வழிகாட்டல் கையேடு வெளியீடு

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியுள்ளதால், சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நோயாளர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் ஆகியோருக்கென பல வழிகாட்டுதல் கையேடுகளை வெளியிட்டுள்ளது.

வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களில் ஒன்று கொவிஷீல்ட் தடுப்பூசியால் நேரக்கூடிய பக்க விளைவுகள் ஆகும்.

இதன்படி பொதுவான பக்க விளைவுகளாக தொடும் போது வலி, வலி, சிவத்தல், தோலில் அரிப்பு ஆகியவை அடங்கும். ஊசி போடப்பட்ட இடத்தில் வீக்கம், கண்டல் காயம் ஆகியவையும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் களைப்பு, குமட்டல், காய்ச்சல் போன்ற உணர்வுகளும் பொதுவான பக்கவிளைவுகளில் அடங்கும். சாதுவான காய்ச்சல், மூட்டு வலி மற்றும் தசை வலி ஆகியனவும் பொதுவானவை. அத்துடன் தலை சுற்றல், பசியின்மை, வயிற்று வலி மற்றும் தோலின் மீது செந்நிறப் பொட்டுக்கள் போன்றவை அசாதாரணமான பக்க விளைவுகளாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி5இ)

# காச நோயாளர்களின் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 30

நாட்டில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் வருடாந்தம் 8,000 முதல் 9,000 காச நோயாளர்கள் பதிவாகுவதாக காசநோய் மற்றும் சுவாச நோய் தொடர்பான தேசிய அமைப்பின் பிரதி பணிப்பாளர், மருத்துவர் நிரூபா பல்லேவத்த தெரிவித்தார்.

55 வயதுக்கு மேற்பட்டவர்ளே இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அடையாளம் காணப்படாத சுமார் 5,000 பேர் உரிய வகையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளாமல் நோய்த் தொற்று காவிகளாகவும் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது மிகவும் ஆபத்தானது, வருடத்தில் சுமார் 500 பேர் காச நோயினால் உயிரிழக்கின்றனர் என மருத்துவர் தெரிவித்தார்.

உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதனால் இதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியும். அத்துடன் நகரங்களில் வசிப்பவர்களிலேயே அதிகமாக இந்த நோய் பரவுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19 . 09 . 1958



மறைவு
31 . 12 . 2020





"கலாலயம்" வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தை பிறப்பிடமாகவும் கனடா ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி கலாமணி (சுசீலா) கா.அருந்தவம்**

*அன்பும் பண்பும் நிறைந்த எங்களது*
*அன்புத் தெய்வமே!*
*இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட*
*இனிக்கும் நினைவுகளுடனே*
*சொந்த பந்தங்கள் வாழ்வாதாரமாய்*
*மகிழ்வுடன் வாழ்ந்திருக்க*
*உந்தனையே அர்ப்பணித்தீரே!*
*என்றும் உம்மை நினைத்தே*
*நாம் அஞ்சலி செய்கின்றோம்!*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*


குடும்பத்தினர்.
077 900 4247

## கண்ணீர் காணிக்கை

யாழ். பொன்னாலையை பிறப்பிடமாகவும்,
கொட்டடியை தற்காலிய வதிவிடமாகவும், கொழும்பை
தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் திரு. நாகன் முருகையா**

அவர்கள் கடந்த 26.01.2021 அன்று
இறைபதம் எய்தினார்



உதிராத மலர் இல்லை
உலராத பனி இல்லை
புதிரான வாழ்க்கை இதில்
புதையாத பொருள் இல்லை
உடையாத சங்கில்லை
ஒடுங்காத மூச்சில்லை
இயற்கை நியதிகளில்
இறப்பும் ஒரு கூறு
அன்றோ ...!

வயக்காட்டு எள்ளு கூட
மொட்டுவிட்டு பூக்கலையே...
கள்ளமில்லா உன் சிரிப்பு
கேக்குதையா - எங்கும்
அச்சிழந்த ராட்டினமாய்
சுத்துதையா....

கொல்லையில கோழிகுஞ்சு
கொட்டடியில் ஆட்டுக்குட்டி
ஊண் உறக்கம் மறந்து
நின்னை தேடுதையா - மனம்
புண்பட்டு பதைபதைத்து
துடிக்குதையா...

காத்தெல்லாம் உன் சுவாசம்
ஆத்தெல்லாம் உன் நேசம்
சாத்தானை விஞ்சிடுமோ
நம் கதறல் - எங்கள்
காப்பானை காலன்
கொண்டு போனதேனையா..???

கனிவுள்ளம் கொண்டாயே
காவல்கள் காத்தாயே
காயங்கள் ஆற்றிட நீ வாராயோ

மண்ணோடு மாய்ந்தாலும்
- தீயோடு
சேர்ந்தாலும் முருகையா - நீ
பெருமை சாதி சனத்துக்கு...

மலையாட்டம் திடம் கொண்ட
மாமனையா - ஒற்றை
தம்பியாய் தோள் தந்த
தோழனையா...

**உங்கள் பிரிவால் துயருறும்:**

சகோதரி
**இராசரத்தினம் கண்ணம்மா**
(சங்கானை) மற்றும் பிள்ளைகளான
**ஸ்ரீகாந்தராஜா புவனேஸ்வரி**
குடும்பம் (சங்கானை)
**உதயகுமார் ஜீவமலர்**
குடும்பம் (சங்கானை)
**ஜெகன் கலாநிதி**
குடும்பம் (பிரான்ஸ்)
**இராசரத்தினம் ஜெயக்குமார்** (சங்கானை)

**இராசரத்தினம் ஜெயக்குமார்**
(சங்கானை)
**மனோகரன் சுஜாதா**
குடும்பம் (வசாவிளான்)
**தயாளகுமார் ராதிகா**
குடும்பம் (லண்டன்)
**அஜன் நிஷாந்தி**
குடும்பம் (சங்கானை)
**கார்த்தீபன் நிரோஷா**
குடும்பம் (லண்டன்)

அன்னை மடியில்
17.07.1950

ஆண்டவன் அடியில்
26.01.2021

# பாடசாலை மாணவனுக்கு கொரோனாத் தொற்று

மட்டக்களப்பு, ஜன. 30
மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரித்து வருகின்றது. மட்டக்களப்பு நகரில் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு கொரோனாத் தொற்று நேற்றுக் காலை இனங்காணப்பட்டுள்ளது என கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார். இந்த மாணவனுக்கு தொற்று உறுதியானதையடுத்து குறித்த பாடசாலையில் அம்மாணவனின் வகுப்பில் கல்வி கற்கும் 30 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி5-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### வடக்கில்...

தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். மன்னாரில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நானாட்டானைச் சேர்ந்த 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. மன்னார் பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்கு வந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மருத்துவமனை பணியாளர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியாவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த காத்தான்குடியைச் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

### 2013இல்....

இந்த விடயம் நேற்று நடைபெற்ற வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கடுமையாக வலியுறுத்தப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வலி.வடக்கில் கெமுனு விகாரை என்ற விகாரை 2013ஆம் ஆண்டுதான் கட்டப்பட்டது. ஆனால் தொல்பொருள் திணைக்களத்தினர் இந்த விகாரை உள்ள இடத்தைத் தொல்பொருள் இடமாக அடையாளப்படுத்தி வர்த்தமானி ஊடாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். வர்த்தமானி அறிவித்தல் வெளியானால் இந்த விடயம் தீவிரமாகிவிடும். இந்த விகாரை உரிய முறையில் அகற்றப்பட வேண்டும். வர்த்தமானி வெளியாவதற்கு முன்னர் இதைச் செயற்படுத்த வேண்டும் என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவரும், சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் இந்த விடயம் தொடர்பில் இறுதி முடிவு எதையும் எடுக்கவில்லை.

"வலி.வடக்கில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இவ்வாறான விடயங்கள் பெரியளவில் பேசப்படுகின்றன. அதனால் இந்த விடயம் தொடர்பாக துறைசார் இராஜாங்க அமைச்சரை அழைத்துத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறி விடயத்தை முடித்துக்கொண்டார்.

இந்த விகாரை வலி.வடக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்து. பின்னர் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்ட பகுதியில் உள்ளது. அங்குள்ள தொன்மையான ஆலயமான குமார கோயிலுக்கு அருகில் அந்த ஆலயத்தின் ஒரு பகுதிக் காணியை அடாத்தாகப் பிடித்து விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது.

விகாரையின் ஏனைய பகுதிகள் தனியார் காணி ஒன்றுக்குள்ளேயே இருக்கின்றன. இந்த விகாரை 2013ஆம் ஆண்டு இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்தது. இந்த விகாரை அமைக்கப்பட்டபோது கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. அந்த விகாரையை அகற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் பௌத்த மக்கள் வசிக்காத நிலையில் விகாரை அமைக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் பலத்த சந்தேகம் வெளிப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-ம-319)

### தமிழர்....

விடயம் ஆதாரங்களுடன் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

குருந்தூர் மலையில் இருந்த முச்சூலம் உட்பட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. அங்கு தமிழ் மக்கள் சென்று வழிபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப்பகுதி மக்களும், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் கோவில் நிர்வாகத்தினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

குருந்தூர் மலையிலிருந்த தமிழரின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அத்தோடு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் இருந்த இடத்தில் மீண்டும் நிறுவப்படவேண்டும் எனவும், தமிழ் மக்கள் குருந்தூர்மலைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள தொடர்ந்தும் அனுமதிக்கப்படவேண்டும் எனவும் ரவிகரன் குறித்த முறைப்பாட்டினூடாகக் கோரியிருந்தார்.

ஆனால் அங்கு அத்தகைய வழிபாட்டு இடங்கள் காணப்பட்டனவெனின், அவற்றை உறுதிப்படுத்தவேண்டும் என்று பொலிஸார் கூறியிருந்தனர்.

முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குருந்தூர் மலையில் இருந்த முச்சூலம் உட்பட தமிழ் மக்களின் வழிபாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் பிறிதொரு நாளில் நேரடியாகச் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்த வேண்டும் எனவும், அப்போது முறைப்பாட்டாளரான ரவிகரனும் குருந்தூர் மலைக்கு வரவேண்டும் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று பொலிஸாரும், முறைப்பாட்டாளர் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் குருந்தூர் மலைக்குச் சென்றனர். அங்கு தமிழரின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸாருக்கு அவர்கள் உறுதிப்படுத்தினர். (த-246)

### வவுனியா....

வவுனியாவில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படும் பலருக்குக் கொரோனாத் தொற்று அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதையடுத்து அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்று வெளியாகின. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 17 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-110)

**சாரதி தேவை**

மென்பான விற்பனை விநியோக நிறுவனமொன்றிற்கு சாரதி தேவை. கனரகவாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே :0212213788/0777808954



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

வெளிநாடு, உள்நாடு, அரச உத்தியோகம், தனியார் நிறுவன மணமகன், மணமகள் அவர்களுக்குரிய பொருத்தமான குறிப்புக்கள் எம்மிடம் உள்ளன. சகல திருமணங்களும் எம்மால் விரைவாக ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
முற்பணம் குறைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி, நல்லூர், MC அருகில், யாழ்ப்பாணம். 0779733183
வி.ஜெயந்தி

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் திட்டமிடல் கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி.கிருபாளினி கிருஷ்ணகுமார்** அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் யோகேஸ்வரி பூபாலசிங்கம்**

அவர்கள் 05.12.2020 (சனிக்கிழமை) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் நிதியாளர்
**அருட்திரு. எ. எட்வினாதன்** அவர்களின்
அன்புத் தந்தையார்


**திரு. பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி சமூகம்**
**யாழ்ப்பாணம்.**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 27 . 06 . 1929



மறைவு 10 . 02 . 2020


**அமரர் முருகேசு சின்னத்துரை**
**(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)**

ஆறாத்துயரில் அழுகின்றோம், ஐயா
தீராத வேதனையில் தேம்பி நாம் அழுகின்றோம்.
மாறாத சோகமொன்றை தந்தே மறைந்தீர்கள்
ஆறாது தீராது இந்தக் கவலை தவிக்கின்றோம்.

**வெல்லப்பிட்டி,**
**புலோலி தெற்கு,**
**[illegible]**

**குடும்பத்தினர்.**

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 08.09.1940
உதிர்வு 31.12.2020

கடந்த 31.12.2020 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் பொன்னர் பூபாலன்**

(ஓய்வுபெற்ற உப அதிபர்
யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.01.2021) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் புலோலி வில்லுபாதி முருகன் கோவிலடியில் நடைபெறும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**முருகன் கோவிலடி, புலோலி.** **குடும்பத்தினர்.**

# தொழுநோய் தொற்றல்ல



**தொழுநோய் ஒழிப்பு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

நடராஜன் கரன்

தொழுநோய்க்கான சிகிச்சை அளிக்கப்படாமல் இருந்தால், நிரந்தரமாக உங்கள் சருமம், நரம்புகள், கை, கால்கள், பாதம் மற்றும் கண்கள் பாதிக்கப்படக்கூடும். நரம்புகளில் சேதம் ஏற்படுவதால், மரத்துப்போன நிலை உண்டாகும் அபாயம் ஏற்படலாம்.

தொழுநோய் என்பது ஒரு தொற்று நோயாகும். இந்த நோய் கடுமையான தோல் அழற்சியை ஏற்படுத்துகிறது. கை மற்றும் கால் சருமங்களின் இதரப் பகுதிகளில் நரம்புகளில் சேதம் உண்டாக்குகிறது. தொழுநோய் பற்றி பயத்தை உண்டாக்கும் பல வித கதைகள் நமது வரலாற்றில் உண்டு. நீண்ட நெடுங்காலமாக இந்தப் பாதிப்பு பல்வேறு எதிர்மறை களங்கத்துடன் மனித இனத்தைப் பயமுறுத்தி வருகிறது தொழு நோயின் தாக்கம் மற்றும் அதன் விளைவுகள் ஒவ்வொரு கண்டத்தில் உள்ள மனிதர்களையும் பாதித்து வருகிறது.

இருப்பினும் தொழுநோய் என்பது பயப்படும் அளவுக்குத் தொற்று நோயல்ல. தொழுநோய்க்குச் சிகிச்சை எடுக்காமல் இருக்கும் நோயாளியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் மற்றும் அவரின் மூக்கு மற்றும் வாயில் இருந்து வடியும் நீர் ஒருவர் சருமத்தில் அடிக்கடி படும்போது தொழு நோய் பரவும் வாய்ப்புள்ளது. பெரியவர்களை விட குழந்தைகளை இந்த நோய் அதிகம் பாதிக்கிறது. உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கெடுப் பின்படி, உலகம் முழுவதும் உள்ள தொழு நோயாளிகள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 80ஆயிரம் ஆகும். அதிலும் ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் அதிகமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



### உண்டாகக் காரணம்

மெதுவாக வளரும் பக்றீரியா வகையைச் சேர்ந்த மைகோபக்டீரியம் லேப்ரே என்ற பக்றீரியா தொழு நோய்க்கு காரணமாக உள்ளது. 1873 இல் லேப்ராவை கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயரால், தொழு நோய் ஹான்ஸென் நோய் என்றும் அறியப்படுகிறது.

### அறிகுறிகள் என்ன?

தொழுநோய் முதன்மையாக சருமத்தைப் பாதிக்கிறது. மூளைக்கு வெளிப்புறம் உள்ள நரம்புகளையும், முதுகுத் தண்டையும் பாதிக்கிறது. தொழுநோய் கைகளையும் பாதிக்கலாம் மற்றும் மூக்கின் மெல்லிய திசுக்களையும் பாதிக்கலாம்.

உருச்சிதைக்கும் சரும புண், கட்டிகள், பல வாரங்கள் அல்லது மாதங்கள் ஆனாலும் கரையாத புடைப்பு போன்றவை தொழுநோயின் முக்கிய அறிகுறியாகும். சருமத்தில் உள்ள புண் வெளிர் நிறத்தில் காணப்படும்.

சருமத்தில் உண்டாகும் புண்களின் எண்ணிக்கை மற்றும் வகைகளைப் பொறுத்து தொழு நோய் வகை தீர்மானிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குறிப்பிட்ட வகை தொழு நோய்க்கும் அதன் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை முறைகள் வேறுபடுகின்றன.

### தொழுநோய் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

ஐயம் உண்டாக்கும் விதத்தில் உங்களுக்கு சருமத்தில் புண் ஏற்பட்டால், உங்கள் மருத்துவர் புண் பாதிக்கப்பட்ட சருமத்தின் சிறு பகுதியை எடுத்து ஆய்வகப் பரிசோதனைக்காக அனுப்புவார். இதனை ஸ்கின் பயோப்சி என்னும் திசுச் சோதனை என்று கூறுவர். ஸ்மியர் டெஸ்ட் என்னும் பரிசோதனையும் செய்யப்படும்.

### சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது?

தொழு நோய் என்பது குணப்படுத்தக் கூடிய ஒரு நோயாகும். கடந்த 20 ஆண்டுகளில் 16 மில்லியன் மக்கள் தொழுநோயிலிருந்து மீண்டு வந்துள்ளனர். தொழுநோய் உள்ள நோயாளிகளுக்கு உலக சுகாதார நிறுவனம் இலவச சிகிச்சை வழங்குகிறது. தொழு நோயின் வகைக்கு ஏற்ப சிகிச்சை மாறுபடுகிறது.


தொற்று பாதிப்பைப் போக்க நுண்ணுயிர்கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நுண்ணுயிர்கொல்லி மருந்துகள் நீண்ட கால சிகிச்சைக்கு அதாவது குறைந்தது ஆறு மாதங்கள் முதல் ஒரு வருட காலம் வரை பரிந்துரைக்கப்படுகின்றன.

கை மற்றும் கால்களில் உணர்வு இழப்பு, தசைகள் பலவீனமாதல் போன்றன தொழுநோய் தாக்கும்.

பக்றீரியாவுடன் தொடர்பு ஏற்பட்டு 3 முதல் 5 வருடம் கழித்தே நோய் தாக்கத்துக்கான அறிகுறிகள் தென்படும். சில மனிதர்களுக்கு 20 வருடத்துக்குப் பின்னும் அறிகுறிகள் தென்படாது. பக்றீரியாவுடன் தொடர்பு ஏற்பட்ட காலம் மற்றும் அறிகுறிகள் தென்படும் காலம் ஆகிய இரண்டுக்கும் இடையான காலத்தை இன்குபேஷன் அதாவது அடைகாக்கும் காலம் என்று கூறுகின்றனர்.

இந்த அடை காக்கும் காலம் நீடித்து இருக்கும்போது ஒரு மனிதனுக்கு எப்போது எந்த இடத்தில் தொழு நோய் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க முடியாத நிலை மருத்துவர்களுக்கு உண்டாகிறது.





# நயினை ஆலயத்துக்கு பொருள்கள் கையளிப்பு

நயினாதீவு,ஜன.30

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு இந்தியக் கொன்சீயூலர் பாலச்சந்திரனால் இசைக்கருவிகளும், புத்தகங்களும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

ஆலயத்துக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான **வீணை,வயலின்,ஹார்மோனியம்,மிருதங்கம்** மற்றும் புல்லாங்குழல் என்பன வழங்கப்பட்டன. அத்துடன் ஆலய நூலகத்துக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களின் தொகுப்பும் வழங்கப்பட்டது. ஆலயத்தில் வைத்து இந்தியக் கொன் சீயூலர் பாலச்சந்திரன் அறங்காவலர் சபை தலைவர் ப்.க.பரமலிங்கத்திடம் பொருள்களை கையளித்தார். (ஐ)

# 29 நாள்களில் 103 பேரை கடித்துக் குதறின நாய்கள்

## தென்மராட்சியில் சம்பவம்

சாவகச்சேரி, ஜன. 30



ஜனவரி மாதம் நேற்று வரை தென்மராட்சி பிரதேசத்தில் 103 பேர் நாய்களின் கடிக்கு இலக்காகி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. பிரதேசத்தில், வளர்ப்பு மற்றும் கட்டாக்காலி நாய்கள் ஆகிய வற்றாலேயே அனைவரும் கடியுண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி நாய்கள், பூனைகள் மற்றும் முதலை, போன்றன கடித்து, சிகிச்சை பெற வருபவர்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுகிறது என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (ப-9)

## ஆட்டோக்கள் விற்பனைக்கு

201- /206- /HX இலக்கங்களை உடைய ஆட்டோக்கள் விற்பனைக்கு உண்டு.

077 898 9691 யாழ்ப்பாணம்

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

இந்தியன் BAJAJ - 125 WIND மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

077 614 6434

## வீடு வாடகைக்குண்டு

வவுனியா. தோணிக்கல் பகுதியில் வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு:

076 322 3687/ 024 222 2289

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபாய்.
தொடர்புகளுக்கு: 077 334 1281

## விற்பனைக்கு

வெதுப்பக உற்பத்திக்குரிய உபகரணங்களாகிய டீசல் அவன், மா.குழைக்கும் மிசின், கேக் மிஷின், பாண் வெட்டும் கட்டர், வளைவு சோக்கேஸ், கண்ணாடி அலுமாரி குளிர்சாதன பெட்டிகள், நெஸ்கோப்பி மிசின், மேசைகள், கதிரைகள், இறாக்கைகள் மேலும் பல பொருட்கள் விற்பனைக்கு உண்டு.

தொ.இல.: 0777 283 705

## ஆலய பூசகர் / குருக்கள் சேவை

சிவாகம முறைப்படி ஆசாரத்துடன் ஆலய வளர்ச்சிக்காக கோவில்களில் நித்திய, நைமித்தி, காமிக கிரியைகள் சேவை மனப்பாங்கோடு செய்வதற்கு அர்ச்சகர்கள். குருக்கள் உள்ளனர்.

074 179 1300

## காடை குஞ்சுகள் காடை இறைச்சி

1 நாள் குஞ்சு 25/=, 10 நாள் குஞ்சு 55/= , 20நாள் குஞ்சு 85/=, 30 நாள் குஞ்சு 100/=, 45 நாள் குஞ்சு 140/=, காடை இறைச்சி (உயிர்) 1 Kg 700/= , முட்டை 6/= தொடக்கம் 10 /=

பண்ணாகம் 077 332 2433

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08 உப்புக்குளம் வீதி ஆதன இல 13 என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தினைக்கொண்ட ஆதனம் நாகமுத்து சின்னத்தம்பி விஸ்வநாதன் ஆறுமுகத்தின் உரிமையாளர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நாகமுத்து கணபதிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகா தேவா முகதாவில் நிறைவேறிய 559 இலக்க 09.10.1950ம் திகதிய அறுதி உறுதி மூலம் நாகமுத்து சின்னத்தம்பிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் நாகமுத்து சின்னத்தம்பி காலஞ்சென்ற பின் அவருடைய பிள்ளைகளான சின்னத்தம்பி யோகராஜா அலோசியஸ் விமலாதேவி மற்றும் டக்லஸ் வசந்தமாலா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு R.இளங்குமரன் முகதாவில் 791 இலக்க 2010.08.26ம் திகதிய நன்கொடை மூலமாக நாகமுத்து சின்னத்தம்பியின் இன்னோர் மகளான கந்தசாமி லலிதாதேவிக்கு நன்கொடை உறுதி எழுதிக்கொடுக் கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக் குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்தியடி வளவு" நிலப்பரப்பு 09 குளி 03 ஆனால் நில அளவையாளர் எஸ்.சிவலோகநாதன் அவர்களால் 12.06.1989 திகதி யிட்டு வரையப்பட்ட S.473 என்ற இலக்கம் கொண்ட நில அளவைப்படத்தின் படி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு (8) குளி (11) இதில் பிரிக்கப்பட்டதும் மேற்படி வரை படத்தில் துண்டு 6 எனக்காட்டப்பட்டுமான காணி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 7.5 இதற்கு எல்லை.

**வடக்கு :-** புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான காணி.
**கிழக்கு :-** மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 07.
**தெற்கு :-** உப்புக்குளம்.
**மேற்கு:-** மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 02 மற்றும் 05.

தற்போது கந்தசாமி லலிதாதேவி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி லலிதாதேவி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை.**

# எக்னலிகொடவுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களகப்பு, ஜன.30
கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று .மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உழைக்கும் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடக வியலாளரகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ப)

## வாடகைக்கு / குத்தகைக்கு

ராஜா கிறீம் ஹவுஸ் எதிராக உள்ள (நாச்சிமார் கோவிலடி) 2 பரப்பு காணியுடன் கூடிய வீடு வாடகை/ குத்தகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு இல: 077 834 6071

## மாடி வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

இல.14, கமிலா லேன் ஜின்னா றோட், மானிப்பாய் வீதி, 1 பரப்பு மாடிவீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

075 991 0060

## ENGLISH ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

077 658 9443
076 039 9443 யாழ்ப்பாணம்

## Vacancy for Accounts Assistant

Qualification:
- Passed in A/L (Commerce Stream)
- H.N.D.A partly qualified or AAT passed finalist Preferred.

**Contact No: 074 0029 658 or 075 9183 940**
**E-mail : starcontractors12@hotmail.com**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

***மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2019**

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **12.02.2021 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணிவரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.01.2021

P.P.T நிறுவனத்தின் விசேட சலுகை



ups sky cargo solutions DHL

உள்நாட்டு / வெளிநாட்டு பார்சல் சேவை UK 1000/-

A/C 1000/-
பருத்தித்துறை/நெல்லியடி
யாழ்ப்பாணம்-கொழும்பு

Non A/C 900/-
பண்டத்தரிப்பு/சித்தங்கேணி
சங்கானை/மானிப்பாய்
யாழ்ப்பாணம்-கொழும்பு.

300க்கு மேற்பட்ட நாடுகளுக்கான
வெளிநாட்டு
பார்சல் சேவை நடைபெறுகிறது.
நிபந்தனைக்கு உட்பட்டது.

| யாழ்ப்பாணம் | புறக்கோட்டை | வெள்ளவத்தை |
|---|---|---|
| 0764408947 | 0764408954 | 0764408951 |
| 0775731318 | 0112320336 | 0775755175 |

# மரண அறிவித்தல்

மண்ணில் 06 . 03 . 1939

சிற்பனையான் திருவடியில் 22 . 01 . 2021



## திருமதி அருந்தவநாயகி சேமசுந்தரம்

யாழ். வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி சோமசுந்தரம் 22-01-2021 வெள்ளிக்கிழமை கனடா (Toronto) வில் சிற்பனை முருகன் திருவடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை (காங்கேசர்) - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், சோமசுந்தரம் (கனடா) அவர்களின் ஆருயிர்த் துணைவியும், கனடாவில் வசிக்கும் நம்பிரான், நந்தகுமார், நளினி, நகுலகுமார், நரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், சாந்தலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இராசநாயகி, சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனடாவில் வசிக்கும் வாசுகி, சசிகலா, நந்தகுமார், துளசிகா, வர்ணதீபா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் (கந்தசாமி), இராசலட்சுமி ஆகியோரின் அன்பு அண்ணியும், அன்னம், சாரதாம்பாள், யோகேஸ்வரி காலஞ்சென்ற சற்குணபாலன் (CTB) மற்றும் நிர்மலகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பேபி சரோஜா, சிவபுரநாதன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கனடாவில் வசிக்கும் நிலா, சகானா, அபர்ணா , அபினாஷ், லக்சிகா, அக்சயன், அனன்யா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் நாளை (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00-12.30 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

27, மதவடி ஒழுங்கை
சுதுமலை வடக்கு
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 372 6103

## சிறைக் கொத்தணியில் நேற்று மாத்திரம் 56 பேருக்குத் தொற்று

கொழும்பு, ஜன. 30

சிறைக் கொத்தணியிலிருந்து கைதிகள், சந்தேக நபர்கள் அடங்கலாக 56 பேர் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 51 ஆண் சந்தேகநபர்களும் 4 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியும் அடங்குகின்றனர்.

தற்போது 223 கைதிகளும் 5 சிறை அலுவலர்களும் கொவிட்-19 சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 4 ஆயிரத்து 143 கைதிகளும் 129 சிறை அலுவலர்களும் குணமடைந்து சென்றுள்ளனர்.

இதேவேளை, சிறைச்சாலைக் கொத்தணியிலிருந்து இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-இ)

# ஆறாம் மாத நினைவஞ்சலி

அமரர் உயர்திரு

## கிருஷ்ணர் இராஜரட்ணம்

(முன்னாள் பொறியியலாளர்,
பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

தோற்றம் 18 . 05 . 1927

மறைவு 06 . 07 . 2020



மாதங்கள் ஆறு நொடிகளாய் மறைந்தன...
நிழலாய்த் தொடர்ந்தெம்மைக் காத்து நின்ற எம் தந்தையே
எம் நினைவுகளால் உமை தொடர்கின்றோம் இன்று....

தங்களின் ஆத்ம சாந்தி வேண்டி என்றென்றும் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள் மற்றும்
சக குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 04 . 1937

இறப்பு 10 . 02 . 2020



## அமரர் தவமணி சதானந்தன்

ஆறாத்துயரில் ஆண்டு ஒன்று கழிந்ததக்கா
மீளாத்துயில் கொண்டு எமை ஏன் பிரிந்தீர்கள் அக்கா
நிதம் உங்களைத் தேடியலைகின்றோம் அக்கா
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டலைத் தவிர
வேறெதுவும் முடியவில்லை அக்கா.....


நீங்கா நினைவுகளுடன்...
செல்வமணி (சகோதரி)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில்"
என்ற பெரியோர் கூற்றிற்கு இணங்க
வாழ்ந்து மறைந்த எம் குடும்ப ஒளி விளக்கு"

மண்ணில் 21 . 08 . 1944

விண்ணில் 11 . 02 . 2020



## அமரர் வேலாயுதர் காசிநாதர்

(ஓய்வுநிலை பணியாளர் - கைதடி முதியோர் இல்லம்)

திதி: அபரபக்க துதியை

கண் இமைக்கும் நேரத்தில்
ஓர் ஆண்டு ஓடி மறைந்து விட்டது அப்பா!
உங்கள் நினைவே ஒவ்வொரு வினாடியும்
எங்களை வாட்டுது அப்பா.....!

கணவனாக, தந்தையாக, மாமாவாக, தாத்தாவாக
ஆறுதல் தந்து அவலங்கள் தீர்த்தீர்
உம் விம்பம் எம் கண்களில்

கண்ணுறங்கும் நேரத்தில் கனவினில்
உம் திருமுகம் காண்கையில்
கண்விழித்து தேடுகின்றோம்
உங்கள் விம்பம் காணவில்லை!

துயரம் துடைத்த தூயவரே!
இன்பம் தந்த இனியவரே
பாசம் பழகிய பனிமலரே - இனி
எங்களுக்கு உமைப்போல் யாருள்ளார்?

ஓய்ந்து விட்ட ஓவியமே!
கரைந்து விட்ட காவியமே!
வளரமுடியாத வளர்பிறையே
வருவீர்களா? மறுபடியும் எம் தெய்வமே!


அப்பா என்ற சொல்லிற்கு இலக்கணம் வகுத்தவரே
அன்பின் உருவாக கருணையின் வடிவாக
பண்பின் பிறப்பிடமாக ஒழுக்கத்தின் ஊற்றாக
கண்மணி போல் எம்மை எல்லாம் காத்தவரே!

காலங்கள் கடந்து சென்றாலும் கடலுடன்
என்றுமே வாழும் அலைகள் போல் என்றும்
உங்கள் நினைவுடன் வாடுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஈஸ்வரி பவனம்"
கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்
30.01.2021

# மரண அறிவித்தல்



மண்ணில் 01 . 11 . 1930

விண்ணில் 29 . 01 . 2021

## பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" யோவான் 11:25

பத்தாவத்தை இளவாலையை பிறப்பிடமாகவும், விதானஸ் வீதி பாண்டியன்தாழ்வினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா நேற்று (29.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை மரியஞானரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும், பிலோமினம்மாவின் அன்புக் கணவரும், எட்வினா (கனடா), ராஜினா (ஜேர்மனி), அரட்சகோதரி வேஜி (திருச்சிலுவைக் கன்னியர்), ராஜாநாதன் (கனடா), அருட்தந்தை எட்வினதன் (நிதியாளர், ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜோசப் நவரட்ணம், பிரன்சிஸ் சேவியர், அருட்சகோதரி ஹயசிந் (திருக்குடும்பக் கன்னியர்) மற்றும் விக்டர் இம்மானுவேல், மேரி திரேசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரெஜினா திரேசம்மா, இம்மானுவேல், காலஞ்சென்றவர்களான அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம், லூயிஸ் அல்பிரட், லூர்த்தம்மா, பேனடேற் (பேபி) ஆகியோரின் மைத்துனரும், அன்ரன் பரமநாயகம் (கனடா), ஜோய் சயன்ஸ் (ஜேர்மனி), நிரோ பெலிஷியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கரோலின் (கனடா), மிஷேலா (ஜேர்மனி), ஷெரின் (கனடா), ஏட்ரியன் (கனடா), அஸ்லின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜரின் பெரிய தந்தையும், அருட்தந்தையர்களான மேரி ஜோசவ், தவராஜசிங்கம், ஜெயசீலன் ஆகியோரின் உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:அருட்தந்தை எ.எட்வினாதன்
(மகன்)
0094772487800


## முஸ்லிம்களுக்குரிய திருமண சட்டத்தை சீர்செய்ய சட்டவரைவு

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாக ரத்து சட்டத்தை இரத்து செய்வதற்கான கோரிக்கை அடங்கிய சட்டவரைவு நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக் கப்படவுள்ளது.

தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் யோசனையாக இது முன்வைக்கப்ப டவுள்ளது என்று கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்து ரலிய ரத்தனதேரர் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டில் இந்தச் சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப் பித்திருந்தபோதிலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அந்த யோசனை இரத்தாகியது என்றும் அவர் கூறி னார். (தஇ)

# மரண அறிவித்தல்



## டேவிற் சூசைநாதர்

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் சூசைநாதர் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) 29.01.2021 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிளாறம்மாவின் அன்புக் கணவரும், யூட் ஜெயகாந்தன், றெஜினா நந்தினி, காலஞ்சென்ற சந்திரவதனன், சந்திரன், மேரி இமாக்குலேற்றா, கார்மலீற்றா சுகந்தினி, அன்ரன் செல்வராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இக்னேசியா ஜெயசிறி, பாலகுமார், றூபினஸ், மரியகாந்தி, டர்ஷி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகராஜ், பிரியவதனா, மரியதர்ஷனா, விதுர்ஷினி, டரிஸ்ரன், செவான் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான டேவிட் ஞானமுத்து, பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (30.01.2021) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்று புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை.
தொ.பே: 077 6865063

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி விநாயகமூர்த்தி கனகம்மா



தோற்றம் 02.02.1931

மறைவு 29.01.2021

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வதிவிடமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி கனகம்மா நேற்று (29.01.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா-செல்லம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - சீதேவிப்பிள்ளை அவர் களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவி யும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சின்னம்மா மற்றும் காமாட்சியம்மா, முத்துக்குமார், பரமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், தம்பிராசா, பாலலோயினி, தாட்சாயினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரி யும், இராசமூர்த்தி, காலஞ்சென்றவர்களான தற்பராமூர்த்தி, கிருபாமூர்த்தி மற்றும் திருமணச்செல்வி, பங்கயற்செல்வி, தனேஸ்வரி, ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனலட்சுமி, கருணாவதி, லோகமலர், மகாதேவன், சற்குணானந் தன், வேல்அழகன் ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா-பத்மரூபன், சுதர் ஜன் - லோஜினி, சுகிர்ஜா - சதாரூபன், கல்பனா - மயூரன், ஜனனி - பிருந் தாபன், செந்தூரன் - வலஜி, சிவகரன் - கீர்த்தனா, காலஞ்சென்ற வசந்தரூபன் மற்றும் நிசாந்தி - பிரபாகரன், சகானா - மயூரன், சபீனா - பிரவிந்த், செங்கை யாழியன் - காயத்திரி, காலஞ்சென்ற நிறஞ்சனா மற்றும் அபிராமி, பவதாரணி, ஸ்ரீவாணி, சஞ்சயன், மதுரவாசகன், தேனுகா - கௌரி சங்கர், அருணன், கேதாரகௌரி, சதீசன், சாளினி, சாருஜன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திசானா, கவினாஸ், மிதுன், யஸ்சன், ஜெனுசா, சயானா, சாயிதன், சாயிதனா, விசாலி, விசாலன், தீபிகா, றனுஜன், யருசன், ஆதினி, அருகன், கவின், பவிசனா, றூபிஸ், கரீஸ், நவீன், கபிலன், ஆட்விக்லக்ஷ்வின் ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் (உரும்பிராய்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னாங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

வேல்அழகன் - 077 078 2322
மகாதேவன் - 077 0345 141
ஆனந்தன் - 071 418 1880
இராசமூர்த்தி (பிரான்ஸ்- 0033649827352

## மின் இணைப்பில்...

டல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதியில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்து இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அடம்பன், பள்ளிவாசல்பிட்டியைச் சேர்ந்த மூ.மகேந்திரன் (வயது-45), வேட்டையார்முறிப்பைச் சேர்ந்த அ.தேவசங்கர் (வயது-37) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

பிரதான வீதிக்கு அருகில் உள்ள மின் கம்பத்தில் இருந்து சட்டவிரோதமாக மின் சாரத்தைப் பெற்று, வீதிக்குச் சற்றுத் தொலைவில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்கு அமைத்திருந்த மின் இணைப்பில் சிக்கியே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை இருவரது சடலங்களைக் கண்ட பிரதேசவாசிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மின்சார சபையினர் அங்கு வந்து மின் இணைப்பைத் துண்டித்த பின்னர் சடலங்கள் அங்கிருந்து மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-213,56,60)

## தமிழர்கள்...

மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி பதில் ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது-

வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரையில் நான் அந்தக் கருத்தை வரவேற்கின்றேன். ஆனால் 16 வயதிலிருந்து எமது சகல மாணவ மாணவியரும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும்.

அவர்களுக்கு தமிழ் பேசும் அலுவலர்களே பயிற்சி கொடுக்க வேண்டும். ஆணைகள் தமிழிலேயே இருக்க வேண்டும். போதிய தமிழ் பேசும் அலுவலர்கள் இராணுவத்தில் இல்லை என்றால் முன்னாள் தமிழ் போராளிகளுக்கு இந்தப் பணியை செய்யச் சொல்லி அவர்களுக்கு ஊதியமும் வழங்கலாம்.

எந்த விதத்திலும் சிங்களம் பேசுவோரோ சிங்கள மொழியிலோ எமது மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கப்படக் கூடாது. பயிற்சியாளர்களுக்குத் தட்டுப்பாடு இருந்தால் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்ப் பயிற்சியாளர்களை வரவழைக்கலாம்.

அமைச்சர் சரத் வீரசேகர, தமிழ் மாணவ மாணவியர் தமிழர்கள் மூலமாகத் தமிழ் இராணுவப் பயிற்சி பெற இணங்குவாரானால் நான் அவரின் கருத்தை வரவேற்பேன். சிங்கள மொழி பேசும் அலுவலர்களை அனுப்ப நினைத்தால் எமது மாணவ மாணவியர் அல்லது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பயிற்சிகளைப் புறக்கணிப்பார்கள் என்றுள்ளது. (எ-ஒ-இ)

## ஐ.நாவில்...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்து எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் பேசும் அனைத்து மக்களும் திரண்டு, தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அறைகூவல் விடுத்துள்ளன.

இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிராகத் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் போராட்டங்கள் நடத்தியோ அல்லது இலங்கைக்கு எதிராக அமெரிக்கா அழுத்தங்கள் கொடுத்தோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையைக் கண்டித்து காட்டமான அறிக்கை விட்டோ சர்வதேச அரங்கில் எமது நாட்டை அடிபணியவைக்க முடியாது.

நாட்டின் இறையாண்மையை மீறி எவரும் அரசை நோக்கிக் கை நீட்ட முடியாது. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்தே நாம் செயற்படுகின்றோம்.

கடந்த நல்லாட்சி அரசுபோல் நாட்டை சர்வதேசத்திடம் நாம் அடகுவைக்க மாட்டோம். அதைச் செய்வதற்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கவில்லை.

சர்வதேச நெருக்குவாரங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவே மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள். அந்த ஆணையை எவரும் உதாசீனம் செய்ய முடியாது. மக்களின் ஆணையை ஏற்றே இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து விலகினோம்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் கொள்கை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பிரித்துப் பார்க்காமல் தேசிய பிரச்சினைக்குப் பொதுவான ஓர் அரசியல் தீவையே எமது அரசு வழங்கும். நாட்டின் சட்ட திட்டங்களை மீறிப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி எதைச் சாதிக்கப் போகின்றீர்கள் எனத் தமிழ் சிவில் சமூக அமைப்புகளிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (எ-22)

## மோட்டார்....

என்று தெரியவருகின்றது.

இவர் நேற்று சகோதரனுடன் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றிருக்கின்றார். மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் அமர்ந்து பயணித்த அவர், உரும்பிராய் சந்திப் பகுதியில் திடீரென மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேதிசையில் பயணித்த பிக்கப் ரக வாகனம் ஒன்று அவர் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். உயிரிழந்த இளைஞன் ஏற்கனவே மன உளைச்சலில் இருந்தார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10,26)

## ஐ.நா...

கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், சட்ட வல்லுநருமான மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சர்வதேச அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இலங்கை தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை பக்கச்சார்பானதாகும்.

இலங்கையின் சுயாதீனத் தன்மைக்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்த அறிக்கை அமைந்திருக்கின்றது. நாடாளுமன்றத்தின் ஊடாக எடுக்கப்பட்ட சில தீர்மானங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் எவ்வாறு விமர்சிக்க முடியும்?.

இந்த அறிக்கையில் 11 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு அரசு உரிய பதில்களை வழங்கினால் ஐ.நா.சபையின் ஏனைய நாடுகளின் ஆதரவை இலங்கை அரசு பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையை சர்வதேச பொறிமுறைக்குள் கொண்டுவருவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. அவ்வாறு கொண்டுவந்து மனித உரிமைகள் சபையின் கண்காணிப்பின்கீழ் வழக்குத் தொடர்ந்து, சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதே இலக்காக இருக்கின்றது. அது கைகூடாத பட்சத்தில் பாதுகாப்புச் சபை ஊடாகப் பொருளாதாரத் தடை விதிப்பதற்கான நகர்வுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்காக இலங்கை அச்சப்பட வேண்டியதில்லை. தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். புதிய அரசமைப்பில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சரத்துக்கள் இடம் பெற வேண்டும். உள்ளகப் பொறிமுறை உருவாக்க வேண்டும். அவற்றுக்கு மாற்று யோசனைகள் முன்வைத்தால் சீனா, கியூபா, வியட்நாம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் ஆதரவைப் பெறலாம். இந்திய, தென்னாபிரிக்கா போன்ற பொதுநலவாய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறலாம். - என்றார். (எ-44)

## வடக்கு....

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது-

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட சுகாதாரத் துறையினருக்கு நாளை (இன்று) முதல் 3 நாள்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும்.

யாழ்பபாணம் மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 820 தடுப்பூசிகளும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 160 தடுப்பூசிகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 300 தடுப்பூசிகளும், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 தடுப்பூசிகளும், மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரத்து 800 தடுப்பூசிகளும் கோரப்பட்டன. அவை சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களுக்கும் தடுப்பூசிகள் கோரப்பட்டன. அவர்களுக்குத் தனியான ஒரு திட்டத்தின் ஊடாகத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்தது. என்றார்.

**கிளிநொச்சி மாவட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் நாளை (இன்று) 6 மருத்துவமனைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் என். சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கென ஆயிரத்து 100 தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. இவை சுகாதாரத் துறையினருக்கு ஏற்றப்படும். கிளிநொச்சி பொது வைத்தியசாலை, பூநகரி, பளை, தருமபுரம், அக்கராயன் மற்றும் முழங்காவில் ஆரம்ப வைத்தியசாலைகள் ஊடாக தடுப்பூசி ஏற்றும் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. தடுப்பூசி ஏற்றும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது. வவுனியா வைத்தியசாலை ஊடாகத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

**மன்னார் மாவட்டம்**

மன்னார் மாவட்டத்துக்கென ஆயிரத்து 280 தடுப்பூசிகள் கிடைத்திருக்கின்றன என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையினருக்கு நாளை (இன்று) தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவால் இலங்கைக்கு 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவை நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தன. நேற்றுமுதல் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைள் நாட்டில் ஆரம்பமாகியுள்ளன. இதன் ஓர் அங்கமாக இன்று வடக்கில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன. (எ-110,18,56)

## 5 ஆயிரம்...

கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டார். அதேநேரம் நாரஹன்பிட்டியில் உள்ள இராணுவ மருத்துவனையில் மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு நேற்று தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு, தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவால் இலங்கைக்கு 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. நேற்று முதல் நாட்டில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையினர் மற்றும் முப்படையினருக்கு முதல்கட்டமாக தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. (எ-இ)

## தடுப்பூசி....

தெரிவித்துள்ளார். மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம முதல் மருத்துவ அதிகாரியாகத் தடுப்பூசி ஏற்றிக்கொண்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தடுப்பூசிகள் தொடர்பாக அனைத்துத் தகவல்களையும், ஆய்வுகளையும் துல்லியமாக ஆராய்ந்த பின்னரே தடுப்பூசிக்கு மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது. தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கின்றோம். என்றார். (எ-இ)

## தவறான...

வன் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி பிரமந்தனாறு பாடசாலையில் கற்கும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது. மாணவன் நேற்றுப் பாடசாலை செல்லவில்லை. சகோதரிகள் பாடசாலைக்கும், தாய் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வேலைக்கும் சென்றிருந்த சமயம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அந்த நேரம் தந்தையும் கூலி வேலைக்குச் சென்றிருந்தார்.

உயர்தர வர்த்தகப் பிரிவில் கற்கும் மாணவன் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவரது தவறான முடிவுக்குக் காரணம் தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, மூன்று மாதத்துக்கு முன்னர் இதே பாடசாலையைச் சேர்ந்த தரம் 11 மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருந்தார். (எ-214)

# கூரைக்குள் மறைக்கப்பட்ட 25 கிலோகிராம் கஞ்சா மீட்பு



கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியில் வீட்டுக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 கிலோ 456 கிராம் கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் மது ஒழிப்புப் பிரிவினர் நேற்று மீட்டனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் மது ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே குறித்த வீடு சுற்றிவளைக்கப்பட்டு கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. வீட்டு உரிமையாளரும் கைதுசெய்யப்பட்டார். இது குறித்த விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர் (த-214)

# புற்களுக்குள் மறைந்திருந்து தீண்டிய பாம்பு

சாவகச்சேரி, ஜன. 30

சைக்கிள் செயின் கழன்றதால், சைக்கிளிலிருந்து இறங்கிய 43 வயது குடும்பத்தவரை வீதியோரப் புற்களுக்குள் மறைந்திருந்த விஷப் பாம்பு தீண்டியது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சரசாலை துன்னாலை வீதியில் இடம் பெற்றது. பாம்புக் கடிக்கு இலக்கான நபர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி வீதியைச் சேர்ந்த கணேஸ் ஸ்ரீஸ்கந்தராசா என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார். (த9)

## மேல்மாகாணப் பாடசாலைகள் பெப்ரவரி 15 இல் வழமைக்கு!

கொழும்பு, ஜன. 30

மேல் மாகாணத்தில் அனைத்துத் தரங்களுக்குமான பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (தஇ)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு பழனி ஆண்டவர் கோயில் அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்).

(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு :- குரு

077 805 1655

077 596 3845

**கட்டடம் வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரசந்திக்கு அருகாமையில் 2ம் தளத்தில் மூன்று கடைகள். 3ம் தளத்தில் மூன்று கடைகளும். தனியார் கல்வி நிலையங்களுக்கும், களஞ்சிய சாலையாக பயன்படுத்துவதற்கும் சகல வசதிகளும் கொண்ட உகந்த இடம்.

தொடர்பு - குரு

076 2212037

2D-Drawing 3D-Modeling

**Auto CAD**

Personal & Group Classes Contact No:071 8617972

Jaffna-Vavuniya University of Peratheniya University of Moratuwa

**ஊர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

1 நாள் ஊர் குஞ்சுகள் : Rs 75/=

3 மாத குஞ்சுகள் : Rs 480/=

1 நாள் காடை குஞ்சுகள் : Rs 25/=

ஊர் சேவல் : 1 Kg - Rs 700/=

JERI Farm திருநெல்வேலி

0773549140 / 0772741206

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் வின்சன் டீ போல்



மலர்வு :03.04.1938 உதிர்வு : 01.01.2021

கடந்த 01.01.2021 அன்று இறைபதம் அடைந்த அமரர் பிரான்சிஸ் வின்சன் டீ போல் அவர்களின் இறப்பு செய்தியை அறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறி அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்த யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் மற்றும் குருமுதல்வர், அருள்தந்தையர்கள், அருள் சகோதரிகள், ஏனைய சமய தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் தொலைபேசி வழியாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறி செபித்த அனைவருக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கியவர்களுக்கும், பதாகைகள் அமைத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலி நாளை (31.01.2021) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரது ஆன்ம இளைப்பாறுதல் வேண்டி நடைபெறும் செப வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

றோஸ் கொட்,
கடற்கரை வீதி, பருத்தித்துறை.
T.P: 021 226 3129



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.